அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

— Page. No. 469.

ACC-No. 18586

மலர்: 8 இதழ்: 10 விலை அ. 4	துன்முகி ௵ தை ௴ ஜனவரி—பிப்ரவரி '57	வருட சந்தா ரூ. 2-4-0

தந்தை வேள்வி செயப் பொற்கிழியை
ஞானசம்பந்தர்க்கு விமலன் அருளல்

சித்திர விளக்கம் 34 ; பக்கம் 535

பொருளடக்கம்

470

			பக்கம்
1. ஆத்ம ஞானம்	(திருப்புகழ் மணி)	...	533
2. பொற்கிழியும் யாழ் மூரியும்	(கி. வா. ஜகந்நாதன்)	...	535
3. ஆறுமுக ஸ்வாமிகள்	(ரசபதி)	...	538
4. மாணிக்க வாசேர்	(எம். பி. தியாகராஜன்)	...	547
5. நினைவு	(சி. வி. சுப்ரமண்யம்)	...	553
6. அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும் (திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம்பிள்ளை B.A.B.T.,)			556
7. திருத்தணிகைத் திருப்படி திருவிழா		...	561
8. உல்லாச சல்லாபம்	(கி. வா. ஜ.)	...	563
9. பழநித் திருப்புகழ் விரிவுரை	(குகஸ்ரீ)	...	567
10. தை மாதப் பிறப்பு	(ஆ. கி. ரங்கராஜன்)	...	573
11. Religion and History	*(Thiruppugal Mani)*	...	579

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ" முதல் பங்குனி மீ" முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரூ. 2—4—0 முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 9—0—0.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா இருபது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினல் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினல், சித்திரைமீ" முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து சந்தாத் தொகையை பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 8	துன்முகி ௵ தை ௴ டிசம்பர்-56—ஜனவரி-57	இதழ் 10

ஆத்ம ஞானம்

(திருப்புகழ் மணி)

"எனதியானும் வேறாகி எவரும் யாதும் யானாகும்
இதயபாவனாதீதம் அருள்வாயே"

திருப்புகழ் பயின்று பெறவேண்டிய நிலையை விளக்கி விட்டார் ஸ்ரீ அருணகிரி. ஈசா வாஸ்ய உபநிஷத் கூறுவது.

எஸ்மின் ஸர்வாணி பூதானி
ஆத்மைவாபூத் விஜானதஹ
தத்ரகோமோக: கச்சோக:
ஏகத்வம் அநுபஸ்யத:

எல்லாம் ஒன்று என்று உணரும் நிலை எப்போது அடைய முடியும் என்பதை விளக்குகின்றது. எல்லா உயிர்களும் தம்முயிர் போலும், தம்முயிரை எல்லா உயிர்களிலும் உறைவதாகவும் எவன் ஒருவன் பார்க்கின்றானோ அவனே ஆத்ம ஞானி.

"எஸ்துஸர்வாணி பூதானி
ஆத்மன்யேவா அநுபஸ்யதி

கள்ளமனம் மாய்ந்து, களித்தமனம் எய்தி, சிவம்
உள்ளும் நிலைநேர்ந்து, உய்வுறுதான் என்றேயோ.

ஸர்வபூதஸ்தம் ஆத்மானம்
ததோன விஜுகுப்ஸதே''

இந்த ஆத்ம ஞானத்தை வேண்டுவது திருப்புகழ். முருகன் எல்லா உயிர்க்கும் உயிராய் உள் நின்று இந்த ஞாலத்தை நடத்துவதால், இதை உணர்ந்தவன் முருகனையே எங்கும் பார்க்கின்றான். தன்னுள்ளும் தன் ஆத்மாவாகவும் பார்க்கின்றான். இந்தத் தத்வம் நான்கு வேதங்களின் மஹா வாக்யங்களாக அமைந்துள்ளது.

எவ்வுயிரும் தம்முயிர் போல் கருதுவதும், ஆத்ம ஸ்வரூபத்தைக் கடவுளாகக் கருதுவதும் ஞான முதிர்ச்சி யாகும். எல்லா ஜீவராசிகளிலும் வசிப்பவன் கடவுள் என்று உணர்ந்து எவன் பக்தி செய்கின்றானோ அவன் ப்ரம்மத்துக்குள் வசிக்கின்றான் என்றார், ஸ்ரீ கிருஷ்ண பகவான் கீதையில். அவன் கைவிடப்பட மாட்டான் என்றார்.

அவதாரங்கள் எல்லாம் இந்த உணர்ச்சியை உலகெங்கும் பரவச் செய்து, பாவங்களைப் போக்கி எல்லா ஜீவராசிகளும் ஆனந்த மோக்ஷத்தை அடையவே செய்ய வந்த கருணை யல்லவோ?

அகஸ்தியர் வேண்டுவது மிகவும் பெரிது. அருபமாயும் ரூபமாயும் பலவாயும் பரந்திருக்கும் முருகா! ஒரு ரூபமாய் அவதரித்து அருள் புரிகின்றாய். உலகெலாம் ஒரு நொடியில் சுற்றி வந்தாய். உன் பாதங்கள் அமராத இடமே யில்லை. பார்வதியார் உன்னை அலங்கரித்து நாதச் சிலம்பு களால் உன் பாதத்தை அழகு செய்தாள். சிலம்பொலியும் பார்வதியாள் சப்த ப்ரம்மம் அல்லவோ! ஆதலின் முருகா! உன் பாதச் சிலம்பு இனி உலகத்தில் பாபிகள் எவரும் இல்லை யென்றும், யாவரும் மோக்ஷத்துக்கும் பரமானந்த நிலைக்கும் பாத்திரர் ஆவார் என்றும் ஒலித்திட வேண்டும் என்றும் போற்றினர். இந்த அகஸ்திய வாக்கியமே புது வருஷத்திய கருணை உபதேசமாக திருத்தணிகையிலும், சோளிங்கிபுரத்திலும் கூடிய மஹா பக்தஜனக் கூட்டத்தில் நடைபெற்றது. மகிழ்ந்தனர் பக்தர்கள்.

சொல்லைவின் ஆக்காமல் சுத்தசிவ மான்மியமே
ஒல்லும் வகையோத, ஓங்காரம் உள்ளுறுமோ.

<u>அட்டைப்பட விளக்கம்</u>

பொற்கிழியும் யாழ்முரியும்

(கி. வா. ஜகந்நாதன்.)

திருப்பட்டீச்சுரத்தில் இறைவனைப் போற்றித் திருப்பதிகம் பாடிய ஆளுடைய பிள்ளையார் அங்கிருந்து புறப்பட்டு வேறு பல தலங்களைத் தரிசித்து இன்புற்றார். கும்பகோணம் வந்து அங்கே கும்பேசுவரரையும் நாகேசுவரரையும் குடந்தைக் காரோணப் பெருமானையும் தரிசித்தார்; பதிகம் பாடினார். அங்கிருந்து இடையில் உள்ள தலங்களுக்குச் சென்று வழிபட்டுத் திருவிடை மருதூர் வந்து அணைந்தார். அத்தலத்தை அணுகும்போதே ஆதரம் மீதூர "இடைமருதீதோ!" என்று முடியும் பாசுரங்களையுடைய பதிகத்தைப் பாடிக் கொண்டே வந்து இடைமருதை அடைந்தார். அங்கே மகாலிங்க மூர்த்தியைத் தரிசித்துச் சிலநாள் தங்கித் திருப்பதிகம் பாடினார். பிறகு குரங்காடுதுறையை வழிபட்டுக் கொண்டு திருவாவடுதுறையைச் சேர்ந்தார்.

மூவருக்கும் அறிவரும் பொருளாகிய ஆதி மூர்த்தி எழுந்தருளி யிருக்கும் திருவாவடுதுறைக்குச் சம்பந்தப்பிரான் எழுந்தருளுவது தெரிந்து அத்தலத்தில் இருந்த தொண்டர்கள் அப்பெருமானை எதிர்கொண்டு வந்தார்கள். அவர்களைக் கண்டவுடன் பிள்ளையார் முத்துச் சிவிகையினின்றும் இறங்கவே, தொண்டர்கள் அவரை அடிவீழ்ந்து வணங்கினார்கள். பிள்ளைப் பெருமானும் அவர்களை வணங்கி மனமகிழ்ச்சி பொங்கத் திருக்கோயிலை நோக்கி நடந்தார். கோயிலுக்கு முன் சென்று கோபுரத்தை இறைஞ்சி உள்ளே புகுந்து வலமாக வந்து சந்நிதியிலே புகுந்து மாசிலாமணி யப்பரைத் தரிசித்துப் பதிகம் பாடினார். கண்ணீர் வாரப் புளகம் போர்ப்ப இன்புற்ற முத்தமிழ் விரகர் தொண்டருடன் புறம் போந்து அத்தலத்தில் சில நாள் தங்கினர்.

தாம்புபாம் பென்று தடுமாறும் பேயறிவு
ஓம்பாளன் உள்ளத்தில், ஒண்மையிறை வாராதோ.

அப்போது வேள்வி செய்வதற்குரிய காலம் வந்தமையால் சம்பந்தருடைய தந்தையார் சீகாழியிலிருந்து வந்து, வேள்வி செய்வதற்குப் பொருள் வேண்டும் என்று சொன்னார். தந்தையாருடைய மொழிகளைக் கேட்டவுடன் பிள்ளையார் "நமக்கு எல்லாப் பொருளாகவும் இருப்பவை எம்பெருமானுடைய திருவடிகளே அல்லவா?" என்று எண்ணித் திருவாவடுதுறைத் திருக்கோயிலுக்குப் புறப்பட்டார். இறைவன் கோயிலுட் புகுந்து சந்நிதியில் நின்று, "என்னை வேண்டுகின்றவர்களுக்கு வழங்கும் நிதி என்பால் ஒன்றும் இல்லை; உன்னுடைய திருவடிகளையன்றி வேறு புகலறியேன்" என்று கூறித் திருப்பதிகம் பாடினார். "பிறர் எம்பால் ஒன்று கேட்க, அதைக் கொடுக்கும் ஆற்றல் எமக்கு இல்லாமற் போனால் அது உன் அருளுக்கு இழுக்கன்றோ?" என்ற பொருள் புலப்படும்படி அதைப்பாடினார்.

" இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே!
இதுவோஎமை ஆளுமாறு!
ஈவதொன் றெமக் கில்லையேல்
அதுவோ உன தின்னருள்?
ஆவடு துறை யரனே!

என்ற முதற் பாட்டையுடைய திருப்பதிகத்தை அருளினார். அப்போது இறைவனுடைய ஆணையின்படி ஒரு பூதம் ஆயிரம் பொன் உள்ள பொற்கிழி ஒன்றைக் கொணர்ந்து பீடத்தின்மேல் வைத்து, "இக்கிழி என்றும் குறையாத உலவாக்கிழி; சிவபெருமான் அருள் செய்தது" என்றுகூறி மறைந்தது. சம்பந்தர் இறைவனைப் பணிந்து எழுந்து கைதொழுது பீடத்தில் இருந்த கிழியை எடுத்துத் தம் தந்தையார் கையில் அளித்தார். "சிவபிரானைத் தலைவனாக வைத்துச் செய்யும் நல்வேள்வியை நீங்கள் செய்யவும், சீகாழியில் உள்ள வேதியர்கள் செய்யவும் இந்தக் கிழியிலுள்ள பொருள் எடுக்க எடுக்க வளரும்" என்று கூறி அவரை அனுப்பினார்.

பற்றனைத்தும் தீர்ந்து, பரமன் திருவருளே
பற்றுவார் தாள்பற்றிப் பயனுர்வ தென்றேயோ.

அப்பால் பலதலங்களை அடைந்து வழிபட்டுப் பதிகம் பாடித் திருத்தரும புரத்துக்குச் சென்றார். அது திருநீல கண்ட யாழ்ப்பாண நாயனாருடைய தாயார் உதித்த ஊர். அவருடைய உறவினர்கள் பலர் உள்ள ஊர். பிள்ளையாரும் பாணனாரும் வருவதையறிந்து அந்த உறவினரும் ஆர்வத்தோடு எதிர்சென்று வழிபட்டு அழைத்துச் சென்றனர். ஞானசம்பந்தர் அருளும் திருப்பதிகங்களையெல்லாம் யாழ்ப்பாணர் யாழில் இசைத்துப் பாடுவதை அவர் உறவினர் உணர்ந்தார்கள். "இவர் இப்படி இசைத்துப் பாடுவதனால் தான் இந்தப்பதிகங்கள் சிறப்படைகின்றன" என்று அவர்கள் தம்முட் பேசிக் கொண்டார்கள். அது கேட்ட யாழ்ப்பாண நாயனார் உள்ளம் துணுக்குற்று, 'என்ன அபசாரம்!' என்று எண்ணினார். அவர்களுக்குள் சம்பந்தப்பிரானுடைய பேராற்றலைத் தெரிந்து கொள்ளும்படி செய்யவேண்டும் என்று தீர்மானித்தார். பிள்ளையாரை அணுகி, "இந்த ஊரில் உள்ளவர்களும் உலகில் உள்ளவர்களும் தேவரீருடைய பதிகப் பெருமையை நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்காக யாழில் அடங்காத வகையில் ஒரு திருப்பதிகம் பாடியருளினால் என் யாழின் வலிமையின்மையைக் காட்டி உண்மையை உணர்த்துவேன்" என்றார். அப்படியே இறைவன் திருச் சந்நிதியில் "மாதர் மடப்பிடி" என்ற பதிகத்தைப் பாடினார். யாழ்ப்பாணர் எப்போதும் போல் அதை யாழில் அமைத்துப்பாட முயன்று அது யாழில் அடங்காமையால் தடுமாறினார்.

'இந்தப் பெரியோர் இசைக்கும் பதிகத்தை நாம் யாழில் இசைத்து வாசிப்போம் என்று எண்ணித் தருக்குவதும், என்னைச் சார்ந்தார் இவர் பெருமை உணராமல் என்னைப் பெரியவனாக எண்ணுவதும் இந்தயாழினால் வந்தவை அல்லவா? இது இனி நமக்கு வேண்டாம்' என்று எண்ணி அதை உடைக்கப் போனார். அப்போது பிள்ளையார் கையமர்த்தி யாழைத் தம் கையில் வாங்கிக் கொண்டார்: "ஐயா, உம்முடைய யாழை ஏன் உடைக்க வேண்டும்? சிவபெருமானுடைய பெருமை முழுவதையும் இந்தக் கருவியினால் அளந்துவிட முடியுமோ? எந்த அளவோ அந்த அளவுக்கு

ஆக்கம் அருளாக! அதைமறந்த அஞ்ஞானத்
தூக்கம் போக்கும் ஞானத் தொல்பரிதி தோன்றாதே.

இசையமைத்துப் பாடுவதே முறை. இதைக் கைக் கொண்டு இறைவன் திருவருளைத் துணைக்கொண்டு, வந்த மட்டும் வாசியுங்கள்" என்று சொல்லி மீண்டும் அதை அளித்தார்.

பாணர் தொழுது அதைத் தலைமேல் வைத்து வணங்கிப் பிள்ளையார் திருவடியையும் பணிந்து வாசித்தார். அப்பதியில் இனிதே பிள்ளையார் தங்கினார். யாழில் அடங்காத அந்தப் பதிகத்துக்கு 'யாழ்மூரி' என்ற பெயர் அமைந்தது.

(தொடரும்.)

முருகனடியார்: 22.

ஆறுமுக ஸ்வாமிகள்

(ரசபதி)

தலப் பெருமை

நலம் சிறந்தது நடு நாடு. சிறந்த அதன் உட்பகுதியைச் சேதி நாடு என்பர். திருமகளின் கடன கோயிலான **திருக்கோவலூர்,** சேதி நாட்டைச் சேர்ந்தது. விமலன் வீரம் வெளிப்பட்ட எட்டுத் தலங்களுள் அது ஒன்று. குருட்டு நோக்கு, புரட்டுப் போக்கு, திருட்டு வாழ்வுடைய அந்தக அசுரனை அழித்த தலம் அது என்று, அப்பதியின் செய்தியை விரித்துப் புராணங்கள் விளம்புகின்றன. (திருக்கு - அறியாமை; ஓவல் - ஒழிவு.) ஊனம் அகல உதவு பதி அது என்று, பெயர்க்குப் பொருள் விரிப்பர் பெரியோர்.

"வினையை வென்ற வேடத்தான் வீரட்டானம் சேர்மினே"
"வீடு காட்டும் நெறியினான் வீரட்டானம் சேர்மினே"

என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரம், அப்பதியைச் சென்று எவரும் சேவிக்க வேண்டும் என்று ஆணை யிடுவதையும் அறிந்துளம்.

குருமுகம்

குணம் சிறந்த ஒரு முனிவர், அவ்வூரில் குடியிருந்தார். அவர், நிலையான இடம் பொருள் ஏவல் நிறைந்தவர். வீர சைவர். சிறந்த தவத்தைச் செய்தவர். பேறான அனுபூதி பெற்றவர்.

சோறென்றால் வாய்திறந்து, சுகமென்றால் பல்லிளித்து,
ஏறுடையாய்! நினைமறந்த என்பாவம் தீராயோ.

முருகா! முருகா என்று எப்போதும் முறுவலிக்கும் அவர் பெயர் **ஆறுமுக** ஸ்வாமிகள். பலகாலம் நிஷ்டையில் பழுத்தவர். கனிந்த உள்ளம் காரணமாக, அனுபூதி விளையும் வழியை எவர்க்கும் அறிவிக்க எண்ணினர். நிஷ்டானுபூதி யெனும் சிறந்த ஒரு நூலைச் செய்தார். உலக நிலை, உயிர் நிலை, தியான ஆரம்பம், வரவர வளர்ச்சி, இறுதி சிவமாம் இன்பம்; இவைகளை, விரிவாக அந்நூல் விளக்குகின்றது.

(சண்டமாருத வேகத்தில் மனம் சுழலும் இந் நாளில், அந் நூல் கேட்பாரற்றுக் கிடக்கிறது.) அந் நூலால், அன்று பயனடைந் தவர் அளவிலாதவர். மலரை நாடும் வண்டு; கரும்பை மொய்க்கும் ஈ; வள்ளலை நாடுவர் வறிஞர். அதுபோல், பக்குவிகள் பலர், தேடி இவரை யடைவர். பேறுன உபதேசம் பெறுவர்.

சேவைப் பேறு

அதோ வருகிறுர் ஒருவர். ஆறடி உயரம். பொன்னிற மேனி. ஆம். ஆம். எவ்வளவு வேகமாக வருகிறுர். பயபக்தி விஸ்வாசம் பரிமளிக்க, அடியற்ற மரம்போல் ஆறுமுக ஸ்வாமிகளின் பாதமலர் நோக்கிப் பணிந்தார். இரு திருவடிகளையும் இறுகப் பற்றினர். கண்ணீர் பெருக்கிக் கதறினர்.

அவர் அன்பு கண்ட அடிகள், அவரை எடுத்து நிறுத்தி, என்ன வேண்டும்? என்றுர்.

ஸ்வாமி! உமது விமல சேவையே வேண்டும். காலன் கைப் படாதபடி, தங்கள் கமலமலர் அடிகளால், எளிய இந்த அடிமையைக் காப்பாற்ற வேண்டும்.

உமது பெயர் யாது?

வீரபத்திரன் என்பர்.

அதைக் கேட்டு நகைமுகமான ஸ்வாமிகள், பொன் குடத்திற்குப் பொட்டு வைத்ததுபோல், வீரபத்ரா! உன் பெயர் விளக்குகிறது. அஞ்சி ஏன் இப்படி அதிர்கிறது உன் உடல்?

ஸ்வாமி! என் தாய் இறந்தாள்; இனிய என் தந்தை அதன் பின் இறந்தார். இது கண்டு வருந்திய என் பாட்டன் பாட்டியர் ஆன்மாவும் பறந்தது. மறையும் நாடகம் மானுட வாழ்வு. வெளி வேடமெல்லாம் விரைவில் மாயும். அவைகளை எங்கள் குடும்பத்தின் மூலம் அறிந்தேன். வெறுப்பு மனத்தில் விளைந்தது. மனம்

வாழ்கின்றுர்-போல்தோன்றி, வரதினைப் போற்றுது,
தாழ்கின்றுர் கூட்டம் தவிர அருளுதியோ.

அகற்றும் ஞானிகள் தரிசனம். உணர்ந்தேன். சூழ்நிலைகளை உதறினேன். ஓடி வந்தேன். ஸ்வாமி! இவ்வளவே என் வரலாறு.

வீரபத்ரா! கடல் அலைகளைக் கணக்கிடலாம். அங்குள்ள மணல்களை அளவிடலாம். இருக்கும்வரை வாழ்க்கையில் மயங்கியிருந்து, மண்ணிறந்த மானிடங்கள் எண்ணிறந்த கோடி. அவைகளை யாராலும் அளவிட முடிவதில்லை. இவைகளைக் குறித்து எத்துணை சொன்னாலும், அறிவில் ஏறுவது இல்லை. அதிர்ச்சி வந்து தன்னை யாட்டும் பொழுதுதான், ஒரு சிறிது உணரப் பெறுகிறது.

பொத்தல் குடத்து நீர் ஒழுக ஒழுக, குடத்து நீர் குறைந்து கொண்டே போகும்; அதுபோல், நாம் விடும் ஒவ்வொரு மூச்சிலேயும், நாம் புனித ஆயுள் கழிந்து போய்க் கொண்டே யிருக்கிறது. பயனுள நூற்கள் இதைக் குறித்துப் பறை யறைகின்றன. அவைகளை மனனம் செய்து, மேடையில் வாய் மலர்வார் பலர். நீடித்து இச்செய்தி, அவர்தம் நடைமுறையில் நிற்குமேல், ஆ! பேறு முதலில் அவர்களே பெறுதற்கு உரியவர்.

ஸ்வாமி! ஏட்டுக் கல்வியின் துணையால், அகவுலகில் வாழ்பவரை அடியேனும் அறிந்திலன். இதயக் கல்வியே தேவை. சிறந்த அதை அளிப்பது குருபாத சேவை. ஊன்றி இதை உணர்ந்தேன். அமைதியை விரும்பினேன்; வந்த இந்த ஏழையை ஏற்க வேண்டும் என்று, வீழ்ந்து வணங்கினர் வீரபத்ரர்.

சபாஷ்! மனம்போல் வாழ்வு என்றார் மாதவர். அன்று முதல் வீரபத்திரர், ஸ்வாமிகளின் திருவடித் தொண்டர் ஆயினர். சிறந்த பணிகளைக் குறிப்பறிந்து செய்தார். பரம குருவே பர தெய்வம். ஆம்.

"குருப்ரஹ்ம குரோர் விஷ்ணு குருதேவோ மஹேஸ்வரா:
குரு சாக்ஷாத் பரப்பிரஹ்மம் தஸ்மைஸ்ரீ குரவே நம:"

இது அவர் என்றும் உருவேற்றும் மந்திரம். இப்படியே, பல ஆண்டுகள் இடையில் பறந்தன. வாக்கு மனம் காயத்தால் குருவை வழிபட்ட அவர் மேனி, பொன்னாய் மின்னிப் பொலிந்தது. ஆறுமுக ஸ்வாமிகளைச் சேவிக்க வரும் ஒவ்வொருவரும், அணுக்கத் தொண்டரான வீரபத்திரரிடம் விநயம் காட்டினர்.

வீழ்ந்த தரு

"வினைப் போகமே உறு தேகம் கண்டாய்;
வினைதான் ஒழிந்தால்
தினைப்போ தளவும் நில்லாது"

பெண்டுபிள்ளை சுற்றமெலாம் பெருமா! நின் சொருபமெனக்
கண்டுமனம் உள்ளிக் கதிபெறுவ தென்றேயோ.

என்றார் பட்டினத்தடிகள். அதற்கு ஏற்ப, வீரபத்திரர் ஆயுள் தீரும் காலம் நேர்ந்தது.

ஒரு நாள் வைகறை நேரம். நீராடி, விதி முறைப்படி அனுஷ்டித்த வீரபத்திரர், வாழ்விக்கும் குருவைச் சேவிக்க வந்தார். விநயமொடு கும்பிட்டார்; ஆடியது உடலம். நிற்க முடியவில்லை. பொத்தென்று வீழ்ந்தார்.

அண்மையில் இருந்தவர் அலறினர். குய்யோ முறையோ என்று கூவினர். ஆறுமுக ஸ்வாமிகளின் நிஷ்டை கலைந்தது. எழுந்தார். விவரம் உணர்ந்தார். விரைந்தார்.

கனிவொடு குருவைக் கண்டு, விம்மி யழுதார் வீரபத்திரர். ஸ்வாமிகள் அவரை யெடுத்தார். தன் மடிமேல் கிடத்தினார். ஏன் அழுகிறாய்? என்றார்.

ஸ்வாமி! பலகாலம் சமுகத்திற்குப் பணி செய்ய எண்ணினேன். எண்ணத்தில் மண் விழுந்ததே என்ற ஏக்கமன்றி வேறில்லை யென்று, மேலும் மேலும் பொருமினர்.

தவ விறு

பெருகியது இரக்கம். உறுதியான இவன் உள்ளத்தை உணர்ந்திருந்தும், உய்திக்கு உரியவற்றை நாம் உபதேசிக்கவில்லை; இது நமது பிழை யென்று, கலங்காத ஸ்வாமிகள் உள்ளமும் கலங்கியது. என்னமோ எண்ணி, சிறிது நேரம் கண்மூடி யிருந்தார்.

திடீரென்று விழித்தார். புன் முறுவல் கொண்டார். முகத்தில் பொலிவு பிறந்தது.

வீரபத்திரா! நம்பன் முருகனை நம்பிய நான், இன்று உன்னைக் கைவிடுவேன் என்று எண்ணாதே! உன் உயிர் இனி என் வசம். தக்க இடத்தில் உன்னைத் தக்க வைப்பேன். அங்கிருந்து உன்னை ஆறுமுகப் பரமனுக்கு ஆளாக்குவேன்! வருந்தாதே என்று விறிட்டார்.

அவர் சொற்களின் பொருளை எவராலும் அறிந்து கொள்ள இயலவில்லை. என்னமோ சொல்கிறார் என்றே எண்ணினர். மடியிலிருந்த வீரபத்திரரை எதிரில் கிடத்திய ஸ்வாமிகள், வீராசனம் இட்டார். அரிய நிஷ்டையில் ஆழ்ந்தார். குகப் பரமன் அருள் நிழலிட்டது. குதூகலித்த உணர்வு, திருவருளோடு கூடியது.

தன் ஆத்ம சக்தியால், வீரபத்திரர் ஆத்மாவை யீர்த்தார். அரிய தன் ஞானவொளியில் அமர வைத்தார். அதன் பின் எழுந்தார். மாணவர் உடலைச் சமாதி வைத்து மறைத்தார்.

தொண்டர் மலர்வண்டாய்த் தூய இன்பம் காண், மல வண்டாகி யிப்பேதை மதிமாழ்கல் என்னேயோ.

கண்கட்குப் புலனாகாத உயிரைக் கண்டு, அதைத் தன்னுள் கலக்கச் செய்யும் அவர்க்கு, வீரபத்திரரை இறவாதபடிச் செய்ய வும் இயலும். அவரது இதயாகாச இறைவன் ஆணைப்படி, நிகழ்ந் தது இந்த அருஞ் செயல் என்று நம்புகின்றார் நல்லோர்.

எனைத் தள்ளினாலும் பாதகம் இல்லை. முருகா! குமரா! எனை நம்பிய இந்த ஆன்மாவைக் கா! கா!! ஏறு மயில் வாகா! வீறு தரும் வேலா! பேறு தரும் பெருமா! புண்ணியமான தம்பதிகட்குப் புத்திர தாபம் உண்டாக்கு! அவர்கள் என்னை நோக்கி வரும்படி, துரையே! தூய அவர்தம் உணர்வை நீ தூண்டு என்று, நாள் தோறும் கந்தப் பெருமானை, ஸ்வாமிகள் எண்ணி யேத்தி யிருந் தார்.

பிரார்த்தனைப் பயன்

திருக்கோவலூரைச் சார்ந்த ஒரு கிராமம். அவ்வூரில் ஒரு பக்தர். அவர் பெயர் குமாரஸ்வாமி. அவர் தேவியின் பெயர் பூரண லோசனி. வாழ்வாங்கு அத் தம்பதிகள் ஊரில் வாழ்ந்த வர்கள். இனிய வசதி பல இருந்தும், அவர்கட்குப் புத்திரப் பேறு இல்லை. அக் குறையை, பலநாள் எண்ணி மனம் கண்ணினர்.

முழுதும் உணர்ந்தவர் கோவலூர் முனிவர்; இன்று எவர்க் கும் தெய்வம் போல இருக்கிறார். முன்னே அவரிடம் சென்று முறையிடுவோம் என்ற நினைவு, திருவருள் தூண்ட எழுந்தது. புனித தம்பதிகள் புறப்பட்டனர். ஆறுமுக ஸ்வாமிகளின் மாளிகையை அணுகினர், வணங்கி அவரை வழிபட்டனர். அவர் கள் அன்பு கண்டு, முனிவர் திருமுகம் மலர்ந்தது.

ஸ்வாமி! இந்நாட்டில் இருக்கும் இதிகாசங்கள் இரண்டு. ஒன்று இராமாயணம். மற்றொன்று பாரதம். புத்திர வேட்கை யால், பாண்டு மன்னர் பட்ட பாட்டைப் பாரதத்தில் படித்தோம். இன்ப மக்கள் வேறு இருந்தும், இராமன் வனம் சென்ற செய்தி கேட்டதும், இறந்தார் தசரதர். இவைகளை ஓதிய நாள் முதல், மக்கள் பேற்றையே எண்ணுகிறது எங்கள் மனம்.

அருந்தவ மேதகை தாங்கள் அருள் பாலித்தால், நியதியான எங்கள் எண்ணம் நிறைவேறும் என்று, உணர்கிறது எங்கள் உள்ளம். அருளக ஸ்வாமி யென்று, வீழ்ந்து வணங்கி இருவரும் வேண்டினர்.

தோகை மயில் வாகன் தூண்டுதல் இது என்று, ஆறுமுக ஸ்வாமிகள் இதயம் ஆறுதல் கொண்டது.

சேதார மாகிச் சிதையாமல், உன்றன்
பாதார விந்தமே பார்க்க அருளுதியே.

பேறு தரும் இருவர் பிறந்தால், உரிமையாக்கி, எனக்கே முதல் மகவை உதவ முடியுமா? என்றார் ஸ்வாமிகள்.

ஆஹா அப்படியே செய்கிறோம் என்று, இருவரும் மும்முறை கூவினர்.

முனிவர் கண்ணை மூடினார். உணர்வில் அருளொளி உதயம் செய்தது. முருகா! முருகா என்றபடி, தம்பதிகட்கு அரிய திரு நீற்றை யளித்தார். அதன் பின் கண் திறந்தார். சிறக்க நிறை நோக்கம் செய்தார். நோக்கின் வழியே, வீரபத்திரர் ஆத்மா வெளிப்பட்டது. பூரண லோசனி கருவில் புகுந்தது. இங்கு நாம் சிந்திக்க வேண்டியன சிலவுள.

ஆத்ம ரகஸ்யம்

ஒவ்வொருவர் உடலிலும், பல உயிர்கள் இருந்து படபடக்கின்றன. கிருமி உருவில் தங்கி, எடுப்பான ரூபம் கொள்ள எண்ணுகின்றன. இயற்கை வடிவ இறைவன் திருவருள், ஆன்மாக்களின் வினை நிலைக்குத் தக்க ஆக்கையை அளிக்கும். ஆதலின், படபடக்கும் உயிர்களின் எண்ணம் பலிதம் ஆவதில்லை. எண்பத்து நான்கு லட்சம் ஜீவ பேதங்கட்கும் இஃதே செய்தி.

அந்த சூட்சுமத்தை ஞானிகள் அறிவர். அவசியம் நேரும் அமயம், தம் திருமேனியில் தங்கிய சில ஆன்மாக்கட்கு, உரிய உடம்புகளை உதவுவர்.

அரச பரம்பரை பரசுராமரால் அழிந்தபோது, மன்னர் தேவியர்க்கு, மாதவர்கள் சங்கற்ப மாத்திரத்தால் மகப்பேறளித்த கதை பிரசித்தம். திருதராட்டிரன், பாண்டு, விதுரர் முதலியோரை வியாசர் விதித்ததும் இந்நிலையில்தான். கருத்தடை குறித்துக் கண்ட இடமெலாம் கதறு குரல், இன்று எங்கும் எதிரொலிக்கிறது. மனோ வேகம் போல், சிந்தனையின்றிப் பேச்சுக்களைச் சிதறும் பலர்க்கு, விமல திருவருள் நுட்பம் இன்று விளங்காமல் இருக்கலாம். இயற்கையின் அமானுஷ்யத் தன்மையை, இன்னோர் உணர, ஒரு காலம் வரும் என்று நம்புகின்றார் மேலோர்.

அன்பைத் தன்பால் வைத்த ஒரு ஆன்மா, இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ என்று ஏங்காதபடி, அந்த ஆன்மாவைத் தம் தவ சக்தியால் ஈர்த்துத் தம்மில் இருத்துவதும், புனித இடத்தில் தங்கவைத்து, புண்ணிய உருவாக்கி எடுப்பதும், ஆறுமுக ஸ்வாமிகள் போன்றவரால்தான் ஆகும். "தடக்கைப் பங்கயம்"

சிந்தை மயங்காமல், சிவசிவஎன் றேத்திப்
பந்தமறும் நெறியே பயிலக்கண் பாரஈயோ.

என்ற திருப்புகழில், "கணத்தில் சென்(று) இடம்(து) இருத்தித் தண்டையங் கழற்குத் தொண்டு கொண் டருள்வாயே" என்பது இங்கு எண்ணத்தகும்.

'மச்ச மெச்சு சூத்ரம்' என்ற திருப்புகழில்,

"இக்கடத்தை நீக்கி அக்கடத்துள் ஆக்கி
இப்படிக்கு மோட்சம் அருள்வாயே"

என்றபடி, பிரணவ மேனி பெற்றால்தான் பேறு என்று குறிப்பிடும் அருணை முனிவர் அறிவிப்பு, இங்கு நினைவி லூறுகிறதல்லவா! இனி வரலாற்றிற்கு வருவோம்.

வாக்கின் ஆக்கம்

அருள் பெற்ற தம்பதிகள் அங்கிருந்து அகன்றனர். ஊர் போய்ச் சேர்ந்தனர். வரவர கரு வளர்ந்தது. பூரண லோசனி, பத்தாம் திங்களில் ஒரு பாலனைப் பெற்றாள். அம்மகவு, முனிவர் திருமேனியி லிருந்த அணுக்கத் தொண்டர் என்பதை, எவரும் அறியார். வரவர மைந்தர் வளர்ந்தார். மூன்று ஆண்டு முடிந்தது. பின்னும் ஒரு பிள்ளை பிறந்தது.

ஒருநாள், மாதவர் மொழிப்படி, தம்பதிகள் மகவை யெடுத்து வந்தனர். முனிவர் திருவடியிற் கிடத்தினர். தாமும் வணங்கினர்.

சிவமாம் தண்மைச் செம்மலே! அன்று அருளியப்படி, பிறந்த முதல் பிள்ளை இவன்; ஏற்க என்று இறைஞ்சினர்.

மனம்போல் வாழ்வு உங்கட்கு மலரும்; போய் வாருங்கள் என்று ஆசி கூறி, ஸ்வாமிகள் தம்பதிகளை அனுப்பினர். மாபெரும் முதல் மகவைமறந்து, இளங்குழந்தையுடன், உரிய அவர்கள் தம் ஊர் போய் சேர்ந்தனர்.

வளர்ந்த வழி

வந்த முதல் மகவை ஸ்வாமிகள் வாரி யெடுத்தார். உச்சி மோந்தார். உடலம் வருடி உள்ளம் உருகினார். சண்முகம் என்று பெயரிட்டார். புனித கரத்தால் நீறு பூசினார். இலிங்க தாரணம் செய்வித்தார். அன்னை நினைவு நேராதபடி, அன்பு பெரிதும் காட்டி, ஒரே இலையில் தன்னுடன் உண்ண வைத்தார்.

தற்பரன் வேல் ஒன்றைத் தாபித்தார். சண்முகா! பார்த்த கண் வாங்காமல் இதையே பார் என்று பழக்கினார்.

புண்ணியமாம் நின்கோயில் புகுந்துவலம் வந்தே
மண்ணுறைந்த வாழ்வை மறக்க அருளுதியோ.

தாயும் தந்தையும் குருவுமான ஸ்வாமிகள் உபதேசப்படி, இளம் சண்முகர், அப்படியே நோக்கி யிருந்தார். நாள்கள் வாரமாகி, வாரங்கள் மாதங்களாகி வளர்ந்தன. வரவர, வேல் கட்புலனாகாமல் மறைந்தது; அது இருந்த இடத்தில், உருத்து எழுந்தது தெய்வ ஒளி.

அது கண்ட சண்முகர் அலறினர். உடனே எழுந்த ஜோதி மறைந்தது. ஆறுமுக ஸ்வாமிகள் அதை அறிந்தார்.

அஞ்சாதே சண்முகம்! புனித அவ்வொளியே எவர்க்கும் புகலிடம். அதன் அருமையை அறிய, கனிந்த அருள் நூற்களை இனி நீ கற்க வேண்டும் என்றார்.

அன்று முதல், கருணை மிகுந்த தெய்வ நூற்களை, தானே கற்பித்தார். வரவர கலையறிவு வளர்ந்தது. வயதும் பதினாறு நிறைந்தது.

கலை ஞானமும், ஞானசக்தி தியானமும் கைவந்த சண்முகத்தை, கண்டு களித்தார் குருநாதர்.

பாடும்பணி

சண்முகம்! அன்று உன் முன் காட்சியான அருளொளி, படர்ந்து உன்னில் பாயும்படி பாடு! வேலா! ஆண்டவனே! என்று, முருகன் உருவை உணர்ந்து ஓது! உம்...உம்...ஆகட்டும் என்று ஊக்கினார்.

அவ்வளவில், சண்முகத்தின் உள்ளம் முருகனை உணர்ந்தது. புனித அன்பு பொங்கியது. குருநாதர் கொடுத்த தலைப்புகளையே முதலும் முடிவுமாக் கொண்டார்.

"வேலா சரணம்! சரணம்! என் மேல் வெகுளாமல், இனி
மேலா யினும் கடைக் கண்பார்! பருப்பத வேந்தன்மகள்
பாலா! குறுமுனி யார்க்கும், திருப்புகழ்ப் பண்ணவர்க்கும்,
ஆலாலம் உண்டவர்க்கும், உபதேசித்த ஆண்டவனே!"

"ஆண்டவ னே! புல கம்காண வே நின்றும், அவ்வவர்கள்
வேண்டும் பொருள்தரு வாய்; முருகா! நின்னை வேண்
டறியார்]
காண்டற் கொருதெய்வம் வேறுள தோ? கம லாசனனும்;
மாண்தரு மாலும், மகவானும் தேடிய மந்திரமே!"

புல்லி நினதருளைப் புளகிக்கும் பேறுதனை
வல்லவா தந்தடியேன் வாழஅருள் செய்வாயோ.

"சிந்தனை செய்ய வருமுருகா! நின் திருவடியை
வந்தனை செய்து, வணங்கி நின்றால், வந்த வல்வினையும்,
அந்தகனார் விடும் ஓலையும், தூதரும், அம்புவிமேல்
பந்தமும், தொந்தமும், பாசமும் நாசப் படுமினியே"

என்று பாடுகிறார்; சண்முகம் இப்படிப் பாடிக் கொண்டே யிருக்கிறார்,

அந்தாதி யில்லா ஆண்டவன் மேல், சண்முகர் பாடிய முருகர் அந்தாதியைக் கேட்டு, புளகித்தார்கள் அங்கிருந்த புனிதர்கள்.

நிறைவு

நிஷ்டானுபூதியை, முருகா! என் மூலம் நேர வைத்தாய். பெரும் தகிதாலே, என் சீடன் மூலம் பிறப்பித்தாய்! வாழி குமரா! வாழி உன்னருள் என்று வாழ்த்தி, ஆனந்தக் கண் மழை பொழிந்தார் ஆறுமுக ஸ்வாமிகள். தன் இடம் பொருள் ஏவல் அனைத்தையும் சண்முகத்திற்கே உரிமையாக்கி, இன்புற்றுச் சில காலம் இருந்தார். இறுதியில் சிவானந்தம் எய்தினார்.

அகமுகமாக குருவைக் கண்டு அகமகிழும் சண்முகர், இதனால் அதிர்ச்சி அடைந்திலர். சிவகுமரா! சிவசுதா என்று ஏத்திப் போற்றி யிருந்தார்.

பாடுவதும், பரமன் அருள் எண்ணி ஆடுவதுமாக இருந்த சண்முகர் முன், ஏத்திய போதெல்லாம் முருகன் எதிர் நின்றான். தன் முன் பிறப்பும், பின் இருப்பும், குருமுகமாகி உதவிய ஆறு முகப் பரமன் அருளாக்கம் என்று எண்ணி அகமுருகும் சண்முகர்,

"கரனே முதலிய ராவணனார்குலம் கட்டறுத்துத்
திரமே வியதிரு மால்மருகா! நின் திருவடியென்
சிரமேல் பதித்துச் சிவோகத்தி லேநின்று சிந்தைசெய்ய
வரமே அருள்முருகா! மயிலேறிய மாணிக்கமே!"

என்று பாடிப் பரவினார் சண்முகர். ஆறுமுகனார் அருளால், அவர்க்குக் கணக்கிலாத சித்திகள் கைவந்தன.

அவர் கருணையால் நோய் தீர்ந்தார் பலர். கலிமணம் கமழ்ந்தார் பலர். நிஷ்டானுபவம் நிலைத்தார் பலர். இப்படிப் பயனடைந்த பலர், அவரை ஸ்ரீசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரியார் என்று, போற்றி உள்ளம் புளகித்தனர்.

பார்க்கும் இடமெல்லாம் பரிபூரணமென்றே
ஓர்க்கவுள துள்ளத்தில் ஓங்கொளிதந் தானாயோ.

வரவர ஏகாக்ர சித்தராகி யிருந்தார். திருப்பாதிரிப் புலியூரில் ஒரு திருமடம் கண்டார். உவந்து பலர்க்கும் உபதேசித்தார். வழி வழி அம்மடம் வளரச் செய்தார்.

ஒருநாள், விசாகன் வேல் ஒளி, தன் வியாபகம் காட்டி விளையாடியது. சிவோஹம் சிவோஹம் என்றபடி, அதனுள் பாய்ந்து படர்ந்தது அவர் ஆன்மா. அவர் தோற்றுவித்த திருமடம், இன்றும் பல புலவர்களை உருவாக்கிக் கொண்டே யிருக்கிறது.

இருநூறு ஆண்டுகட்கு முன்பு நிகழ்ந்த இவ்வரலாறு, ஆறுமுகப் பரமன் அடியவர், தாமும் வாழ்வர்; தம்மைச் சார்ந்தவரையும் வாழ்விப்பர் என்பதை, இன்றும் நமக்கு அறிவித்துக் கொண்டே இருக்கின்றது அல்லவா!

வாழ்க முருகன் அடியவர்!

மாணிக்க வாசகர்

(எம். பி. தியாகராசன்)

(516-ஆம் பக்கத் தொடர்ச்சி)

"அவன் நமக்கு எவ்வளவு அருள் புரிந்துள்ளானோ அது நாம் வேண்டியதே யாகும். அவனுடைய அருளை வேண்டுவதே நம் கடமையாகும்." "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்றபடி, அவனை வேண்ட எண்ணம் வருதலே அவனருள் என்று மகிழ்ந்து பிரார்த்தனை செய்யாது, ஏதோ குறைகளை எண்ணி வருத்தப்படுவது நம் குறுகிய மனப்பான்மை யாகும். "சிந்தை வாய்ப் பாயும் சிவபுரத்தரசே" என்றபடி, அவன் நம் சிந்தனையில் பாய்ந்து ஆனந்தத்தை உண்டாக்கி யிருக்கும் தியான காலங்களிலோ, பிரார்த்தனைக் காலங்களிலோ, அதற்கு இடையூறாக நம் குறைகளை எண்ணி அவ்வானந்தத்தை அடையாது விடுவது அறியாமை யாகும்" எனத் தன்னை சிந்தையில் தெளிவு படுத்திக்கொண்டு, மனைவியை நோக்கி, 'ஆம் நீ சொல்வது புரிந்தது. சிவபெருமானை முழுமையும் நம்பாக் குறையாலே கவலை வாழ்க்கை நமக்குக் காணப்படுகிறது.

வஞ்சநமன் வந்தென்னை வலித்தீர்க்கும் முன்னே
கஞ்சமலர்த் தாள்நிழலைக் கண்களிப்பக் காட்டாயோ.

அவனுடைய அருளை நிறைவாக எண்ணாதது நம் குற்றமே.

நம் எண்ணத்தால் நாம் இப்படிப்பட்ட சூழ்நிலையை குடும்பத்தில் ஏற்படுத்திக் கொள்கிறோம். உன்னில் இக் கேள்விகளை யெழுப்பி என் சிந்தையை தூய்மைப்படுத்திய தும் அவனருள்தான்' எனக்கூறி மகிழ்வெய்தி, பின் வரு மாறு தோத்திரம் கூறினர்.

"என்னபுண்ணியம் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னை நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னுகாவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே"

பின்னர் இக்கருத்தமைய "பிரார்த்தனைத் திருமுறை" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி, அதில் "நம்சூழ்நிலைக் கும், குறைபாடுகளுக்கும் நம் மனமே காரணம். சூழ்நிலை கள் நம் மனதின் மாசுகளைக் காட்டும் கண்ணாடி போல்வன. எனவே நம் சூழ்நிலை நமக்கு இன்பமளிக்கவில்லை யானல், நம் மனதிலுள்ள குறைகளை நீக்கிக் கொள்ளல் வேண்டும். சிவபெருமானின் அருள் விலாசத்தை நினைந்து மனதைத் தூய்மைப்படுத்துதலே அதற்குகந்த உபாயமென" விரிவாக எழுதினர். கலங்கல் நீர் நிறைந்த குடத்தில் குழாய் நீர் விட்டுக் கொண்டிருந்தால் கலங்கல் நீங்கி தெளிவு ஏற்படு வதுபோல், சிவ சிந்தனை சித்த சுத்திக்கு ஏதுவாகும். சித்த சுத்தி என்பதென்ன? பிரார்த்தனை, தியானம் என்பவைக ளென்ன? என்று அப்புத்தகத்தில் விளக்கமாகக் கூறியுள் ளார். அதைப் படித்த ஒரு நண்பர் அதை அச்சிட பணம் உதவினர். முதலில் ஒரு 5000 புத்தகம் வெளிப்பட்டது. ஒரே மாதத்தில் அவ்வளவும் விலையாய் விட்டது. பல இடங்களிலிருந்து அப்புத்தகம் வேண்டுமென கடிதங்கள் வந்து கொண்டே யிருந்தன. பின்னும் 10,000 புத்தகங் கள் போட்டு விற்பனை செய்ததுடன், அநேக புத்தகங்கள்

ஒர்ந்தார்க்கு நின்னருளாம்; ஒண்மலர்த்தாள் உன்னிச்
சேர்ந்தார்க்கு வீடாம்; அப்பேறு சேரேனே.

இலவசமாக வழங்கினர். அவருடைய மன விலாசம் அவருடைய வறுமைப் பிணியையும் போக்கி அவருடைய புகழையும் மேன்மைப் படுத்தியது.

அது முதல் அவருடைய குறைபாடுகள் நீங்கின. பிறரிடத்துக் குறைபாடுகள் காணக்கூடாது என்ற எண்ணமுண்டாய், "பார்த்தவிடமெல்லாம் பரமன்காண்" என்ற பாவனையைப் பெரிதும் பயின்று வந்தார். நோயுற்ற நண்பர்களைக் காண நேரிடின், அவர்களுக்குப் பஞ்சாக்கர மகிமையைக் கூறி, அதையே மனனம் செய்து விபூதி கொடுத்து, அவர்களையும் மனனம் செய்யும்படிச் செய்வார். அப்படிச்செய்வதோடு அவர்களுக்கு, "கடலின் நஞ்சமுதுண்டவர் கைவிட்டால் உடலினார் கிடந்தூர் முனிபண்டமே." எப்போது நாம் வாழ்கிறோமோ அது அவன் அருளால் நிகழ்வது; அவனருளால் நிகழ்வது குறையுடையதாகாது. எனவே உங்கள் உடல் நலமாகத்தான் இருக்கிறது. நோய் இருப்பதற்கிடமில்லை" என்ற உறுதியை எடுத்துக் காட்டி, அவ்வாறு அவர்கள் தியானம் செய்ய வேண்டுமென விரும்புவார். அவர்களும் அவ்வாறு செய்துவிட்டால் உடல் நலம் பெறுவர்.

அறிவின் ஆற்றலைக் கொண்டு, இறைவனை இவ்வண்ணன், இங்கிறத்தன் என்று அளவிட்டுச் சொல்ல முடியாது. நாம் இறைவனைத் தேடுதல் சாத்தியமில்லை. என்னுள்ளே நான் கண்டு கொண்டேன்" என்றபடி, உணர்வு முகத்தால் இறைவன் இருப்பை அனுபவிக்க வேண்டும். ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் எந்த எந்த அனுபவம் வேண்டுமோ அவைகளைத் தந்து இறைவன் அவரவர்களின் உணர்ச்சியை பண்படுத்திக்கொண்டு வருகிறான். கண்ணில் நோயிருப்பின், ஒளியைக் காணக் கண்கூசும். அதுபோல் மன அழுக்குகள் இருக்கும் வரை இறைவனின் இன்னருள் விலாசத்தையும், அவனுடைய அன்பை

---

* சாந்தகுணம் தந்தென்னைச் சங்கரா! நீயென்னைக்
காந்தம்போல் ஈர்த்துக் கடைத்தேறச் செய்யாயே.

யும் உணர முடியாது. அவனுடைய அருள் மருளாகத் தோன்றும். வாழ்க்கையி லேற்படும் அனுபவங்கள், மனம் பண்பாடு அடைவதற்கு இறைவனருளால் நிகழ்வன. அவ்வாறு உணர்ந்து நாம் வாழ்வதோடு, இறைவனின் அருளைப் போற்றி வருவோமாயின், "சிந்தை வாய்ப் பாயும் சிவபுரத்தரசே" என சிவபெருமானை உணர்ச்சி முகத் தால் அனுபவிக்க முடியும். அவ்வாறு மாணிக்க வாசீசர் தம் வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்களின் மூலம் மேற் படி உண்மைகளை உணர்ந்தும் பிறருக்கு எடுத்துக் காட்டி யும் வாழ்ந்து வந்தார். மன மாசுகள் படியும் விதம் இனையதென அப்புத்தகத்தில் காட்டியுள்ளார். அதாவது நம் சொற்களினால் தீய எண்ணங்களைச் சிந்தையில் சேமித்து வைக்கிறோம். நாம் பேசும் ஒவ்வொரு சொல்லும் அப்படியே சிந்தையில் குணங்களாகப் படிந்து விடுகிறது. அவைகளே மனதில் எண்ணங்களாக எழுகிறது: அவ் வெண்ணங்களின் இச்சைக் கேற்ப சூழ்நிலைகளைப் பெறு கிறோம். அதன்மூலம் காரியம் நிகழ்கிறது. அது தான் பந்துக்குக் காரணமாயும், தெளிவுக் கிடையூறாகவும் நிற் கிறது. "பாழ்த்த கர்மங்கள் போராடுதே" என்று தாயுமான வர் வருந்தவில்லையா ?

எனவே நாம் பேசும் சொற்களில் நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக யிருக்க வேண்டும்! அதை உணர்த்தவே திருவள்ளுவர்.

"பயனில்சொல் பாராட்டுவானை மகன்எனல்
மக்கட் பதடி எனல்"

"இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்குவது"

அப்படி வாழ்ந்து வரும் காலை, ஒரு நாள் தன்னுடைய மூத்த மகனுக்கு ஜுரம் கண்டது. கண்டதும் மாணிக்க வாசீசர் விபூதிகொடுத்து, தான் "பிரார்த்தனைத் திருமுறை"

ஆரவாரம் தீர்ந்து அத்தாநின் நாமஜெபம்
தேரவா! நின்னடியென் றுவில்லை நின்மலனே.

என்ற நூலில் கூறியிருந்தபடி, "தன் மகன் சிவனுடைய மகனல்லவா? அவனுக்கு இந்நோய் வருவதைக் காண நாம் என்ன பிழை செய்தோம்? சிவ பூசையில் அபசாரம் நேர்ந்ததோ? என்று பலவாறு எண்ணி, அவனுக்கு சிவ சிந்தனை உண்டாகும்படி தோத்திரப் பாடல்களைப் பலவாறாக அவன் பக்கலிலிருந்து படித்து வந்தார். மகன் பிழைப்பது அரிதாய் நாளுக்கு நாள் ஜுரம் மேம்பட்டதே யொழிய குறைந்தபாடில்லை. என்ன செய்வார்? எல்லாம் இருள் மயமாக தன்னை விழுங்குவதுபோல் பயங்கர தோற்றங்கள். மகனுடைய 'நம்பிக்கைக்கே அதிர்ச்சி ஏற்பட்டு விட்டதே என பல்வேறு எண்ணங்கள் அவரைப் பிடித்துத்தின்று. பிரசங்கங்களுக்கும் போகவில்லை. ஏன்? அங்கு என்ன பேசுவது என்று அவர் அஞ்சினர். "திருஅருள் விலாசம் நம்மைக் காப்பாற்றும். அவனருள் கொண்டு நாம் எல்லா நலனையும் பெறலாம். அவனருளைப் பெறுவதற்கு தான் வாழ்க்கையில் கண்ட வழிகள் இவை" என்று, எவ்வாறு தன் மகன் ஆபத்திலிருக்கும் வேளையில் சொல்வது? மாணிக்கவாசகர் கூறியபடி, "பூதலரா லுன்னடியா னென்றேசப்பட்டேன் இனிப்படுகின்ற தமையாதால்" என உலகம் தன்னை ஏளனம் செய்யுமே! இறைவனையும் ஏளனம் செய்யுமே! என நைந்தார். எனினும் வரும் சிவனடியார்களுக்கு வேண்டுவன செய்வதிலேயோ, தம்மை நாடி வரும் அன்பர்களிடத்து அவர்கள் கேட்கும் ஐயப்பாடுகளைத் தீர்த்தும், பாடம் கற்பித்தும் இனியவையே எல்லோரோடும் பேசியும் வந்தார். தன் குறைபாடு தன் மனத்தை வாட்டி உறக்கியதே யொழிய, உள்ளம் அலைமோதுதலை வெளிக் காட்டாது, சிவ சிந்தனையிலேயே லயப்பட்டு வாழ்க்கையை நடத்தி வந்தார்.

அப்படி யிருக்க, ஒரு நாள் காலை வழிபாடு முடித்துக் கொண்டு அவர் தியானத்திருக்கையில், தன் மனைவி மகனின் அந்திய காலச் சின்னங்கள் அவன் முகத்தில்

நாணுமல் நின்னடியார் நற்குழுவே வணங்கிப்
பேணுமல் உய்தியிலை; பெருமஅதை ஓர்ந்தேனே.

காணுவதாக வந்து கூறினள். "நான் செய்வதொன்று மில்லை. உன்னருள்படி நடக்கட்டும்" என்று, சிவபெருமான் அருள் விலாசங்களையும், பெரிய புராண வரலாற்றில் அடியவர்கள் பட்ட துன்பங்களையும் எண்ணி ஆதரவு கொண்டு மீண்டும் சிவயோகத்தமர்ந்தார். உடனே, "இருண்ட மழைக் காலம் போய் தெளிந்த ஆகாயம்போல்" தன்னைச் சூழ்ந்திருந்த மன இருள் அகலப் பெற்று என்று மில்லா அமைதியையும் ஆனந்தத்தையும் அடைந்தார். "சிந்தைவாய்ப் பாயும் சிவபுரத் தரசே" என்று இதுவரை வாயால் பாடியிருந்த மாணிக்கவாசகரின் அனுபவம் இப்படித்தானிருக்க வேண்டுமென்று அன்றே அவருணர்ந்தார்"

அதே நேரத்தில ஒரு சிவனடியார் மாணிக்க வாசிசரைத் தேடி வந்தார். தாயின் கதறலையும் பிள்ளையின் நிலையையுங் கண்டு பஞ்சாக்கர ஜபம் செய்து விபூதியினல் அம் மகனை தடவிக் கொடுக்க, அவனும் ஜுரம் நீங்கப் பெற்று நலமுற்றான். இந்த நற்செய்தி உடனே மாணிக்க வாசிசருக்கு எட்டியது, ஓடோடியும் வந்து சிவனடியார் காலில் விழுந்தார். என் அக்ஞான இருள் இன்றே நீங்கியது. புனர்ஜன்மம் பெற்றேன் என்று புலம்பினர். சிவனடியாரும் அவரைத் தேற்றி, அன்புடையீர்! இது மாதிரியான சம்பவம் ஒவ் ஒரு பக்தனுக்கும் நேரிடுவது சகஜம். அந்த சம்பவம்தான் அவனுடைய தற்போதத்தை வாங்க வல்லது. அப்போதே அவன் சிவபோதம் பெறுவதற்கு உரியவனாகிறான். தான் வழி காட்டுவதாக எண்ணும் எண்ணமும் தன் முனைப்பும், சமஸ்கார ரூபமாகப் படிந்து கிடந்த வாசனு மலங்களும் திரண்டுருண்டு இருளாய் வெளிப்படும்போது, தன்னிலையே தடுமாற்றமடைவது ஒவ்வொரு மனிதனும் அனுபவிக்க வேண்டிய நிலைதான். எனக்கும் இவ்வாறு அனுபவம் வந்து நான் தேறியதுண்டு. "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்று கூறியபடி, இன்றே அவன் "உன் உடலிடங் கொண்டான்." இனி

மானம் இழந்து மதிகெட்ட மானுடமாய்
வான ஞானம் காணு வாழ்வுமொரு வாழ்வாமோ.

உனக்கு ஆன்மானுபவங்கள் மேலிட இறைவன் அருள் புரிவாராக என ஆசி கூறி அவர் விடை பெற்றுச் சென்றார். அதே விதம் சில நாள் வாழ்ந்து சிவபதம் எய்தினர்.

இறைவன் அன்பின் வழி நின்றொழுகுவார்க்கு மேற்படி சரித்திரம் ஒரு நல்ல வழி காட்டியாக இருக்கும்.

நினைவு

(C. V. சுப்ரமண்யம்)

நினைவு அக நினைவு புற நினைவு என இருவகைப் படும். அக நினைவு தன் சொரூபத்தைத் தியானம் செய்தல். புற நினைவு, தனக்குப் புறம்பாயுள்ள விஷயங்களை நினைத்தல். இவ்விரண்டிற்கும் மனமாதி அந்தக் கரணங்களுடையவும், ஞான இந்திரியங்களுடையவும் சகாயம் மிக அவசியம். ஆனல் இவ்விரண்டும் கூடிய நினைவு அகப்புற நினைவு, அல்லது ஆத்மாவின் நினைவு எனப்படும்.

அக நினைவு அருவமாய் விளங்கும் கடவுள் நினைவு.
புற நினைவு உருவமாய் விளங்கும் குரு நினைவு.
அகப்புற நினைவு அருஉருவமாய் விளங்கும் ஆத்ம நினைவு.

கடவுள் நிர்க்குணமா யிருத்தல் பற்றி, கடவுளை நினைக்குமிடத்தில், அல்லது தியானம் செய்யும் வகையில் மனம் மாய்ந்து சிவத்தோடு ஒன்றியிருப்பதை சிவநினைவு அல்லது மங்களகரமான நினைவு எனப்படும்.

குருநாதன் சகுணமாயிருத்தல் பற்றி குருவைத் த்யானம் செய்யும் வகையில், மனம் தன் நினைவாகிய அறிவோடு பொருந்தி யிருப்பதே குருநாதன் நினைவாகும்.

தன்னை அறியும் அறிவுடன் மனம் குவிந்து நிற்கும் சிவயோக அப்பியாசமாகிய தவநெறியே ஆத்மநினைவு எனப்படும்.

ஆண்மையுளர்; காலனையும் அதிர்க்கின்ற மோனிகளின்
கேண்மை பெருகியுளம் கிளர்ச்சியுற லென்றேயோ.

சிவ நினைவின் சாத்தியம் சிவஞானம்.
குரு நினைவின் சாத்தியம் குருஞானம்.
ஆத்ம நினைவின் சாத்தியம் சிவகுருஞானம்.
சிவஞானம் மிகவும் சுலபமான சாத்தியம்.
குருஞானம் மிகவும் சுலபமான சாதனம்.
ஆத்மஞானம் மிகவும் சுலபமான சித்தி.

இம்மூன்றும் சிவஞான சித்தி எனப்படும்.

சிவஞான சித்தி அடைய புகழ் புகழ்தலே, அல்லது பஜனமே மிகவும் சுலபமான சாத்தியமானதாகும்.

"சிவமார் திருப்புகழை எனுநாவினிற் புகழ சிவஞான சிந்தனை அருளவாயே". திருப்புகழ் ஆக நினைவு கருதிடு புத்தி கொடுத்திட சிவ நினைவாகிய சாத்தியமும், சிவ குருவாய் விளங்கும் ஆத்ம நினைவாகிய சித்தியும் கூடிய பஜனமே அக நினைவாகிய ஆத்ம சாக்ஷாத்காரம் அடைய சிறந்த அப்பியாசமாகும். புறநினைவு, முன்னிலையில் காணப்படும் பிறவஸ்துக்களிடத்தில் பஞ்ச இந்திரியங்களோடு பழகி, மனமாதி அந்தக் கரணங்கள் கூடி சுகதுக்கமொடு பொருந்தும் நினைவாகும். அது (1) சரியை, (2) கிரியை, (3) யோகம் என மூவகைத்தாகும்.

சரியை கிரியை யோகத்தின் மாயாது
௩ சலனப்படா ஞானம்—வந்து தாராய்—திருப்புகழ்.

இவை மூன்றும் சலனப்படும் ஞானம் ஆகும்.

சலனப்படும் ஞானம் புறநினைவாகிய ப்ரபஞ்ச நினைவாகும்.

"முருகா என நினைவு—தருவாயே"—திருப்புகழ். தான் வழிபடும் தெய்வமாய் விளங்கும் சத் குருநாதனின் நினைவு அல்லது குருஸ்மரணம்; அகப்புற நினைவாகிய ஆத்ம ஞானத்திற்கு சிறந்த சாதனம் என்றவாறு.

"ஆபாதனேனும் நாளும் நினைவது பெறவேணும்". திருப்புகழ் விஷயங்களில் ஈடுபட்டு உழலும் இயல்புடைத்

பொய்ம்மை தவிர்ந்து புனிதஅருள் தூலோதி
மெய்ம்மையுணர் கென்றெனை நீ மேனிலத்தில் வையாயோ.

தாயிருந்தும், அக நினைவுக்குரிய புறநினைவாகிய குருநினைவு அடைவதுவே, அகப்புற நினைவாகிய ஆத்ம நினைவுடன் கூடிய சுவாநுபூதி அடைய சுலபமான சாத்திய சாதனம் எனலாகும்.

மற்றும் நிதியே நித்தியமே என் நினைவே என்று புகழில் கூறியிருத்தலானது, நித்தியமாகிய ஆத்மஞானம் அண்டிய சாதனத்தின் லக்ஷியமாகிய சாத்தியப் பொருள் குருநாதன் என்ற குருஸ்துதியாகும்.

மேலும் குருநாதனாகிய ஈசுவரனின் லக்ஷணம் எட்டு விதம் என்றும், குருவை வழிபடும் பக்தனின் லக்ஷணமும் எட்டுவிதம் என்றும் நூல்களில் கூறியுள்ளன. குரு லக்ஷணம் (1) தன் வயத்தனாதல், (2) தூய உடம்பினனாதல், (3) இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதல், (4) இயற்கை உணர்வினனாதல், (5) முற்று முணர்தல், (6) முடிவிலாற்றலுடைமை, (7) பேரருளுடைமை, (8) வரம்பிலின்பமுடைமை. பக்தன் லக்ஷணம்—(1) மெய்க்கம்பம் (2) மெய்ப்புளகம் (3) வியர்வை (4) மூர்ச்சை (5) அழுகை (6) தொழுகை (7) கற்கதம் (8) கண்புனல்.

எட்டுவிதமாகிய எட்டுப் படியிலும் நின்ற நினைவே எட்டும் படியாயுள்ள எண் குணபஞ்சரனாகிய சத் குருநாதன் நினைவென்றும், குரு நினைவே அல்லது குரு தியானமே ஆத்மசாந்தியாகிய சுவாநுபூதி நிலையில் பொருந்திய ஜீவன் முக்தி நிலைக்கு மூல காரணம் என்றும் கூறலாயிற்று.

கருணை அடியரொடு கூடியாடி மகிழ்ந்து சரண கமலம் மறவாது பாட நினைத்திடாதே-திருப்புகழ்.

மேற்கூறிய நினைவு அகப்புற நினைவு அல்லது ஆத்மாவின் நினைவாகிய ஆத்மஞான ஆனந்தமாகும். அடியாரோடுகூடும் படி நினைவு ஏற்படுதலே பிருந்த கனமான காரியம். கூடிய பின் அவரோடு கலந்து மகிழ்ந்து பாடும் நினைவு ஏற்படுதல்

கல்லாத யுள்ளம் கசியாத பொய்வாழ்வில்
வல்லாண்மை தந்தென்னை வலித்தீர்த்தால் ஆகாதோ.

மிகவும் சுலபமான காரியம். அதன் விளைவாகிய குருநாத னின் சரண கமலத்தை மறவாது நினைவு ஏற்படுதல் கன சுலபமான காரியம்.

எனவே சிவஞான சித்தியாகிய ஆத்மசாந்தியுடன் கூடிய சுவாநுபூதி அடைய, அநுபூதி மண்டபத்தில் அடியார் திருக்கூட்டத்தில் கலந்து மகிழ்ந்து, அநுபூதி முதலியன பாராயணம் செய்தலோ, அல்லது பாராயணம் செய்வதை சிரவணம் செய்து மகிழ்தலோ மிகவும் சுலபமாகிய சாத்திய சாதனம் என்றவாறு.

அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும்

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A. B.T.)

(503-ஆம் பக்கத் தொடர்ச்சி)

5. சிதம்பரம்

சிதம்பரம், ஐம்பூதத் தல வரிசைகளில் கடைசியானது. இது ஆகாய தலம். அம்பரம் என்பதே வெளியிடம் எனப் பொருள் தரும். சடமாகிய பூதாகாயத்தினின்றும் இது வேறான ஞானகாயமாதலின் சித்+அம்பரம் (ஞான+வெளி) எனப்பட்டது.

வேறு பெயர்கள்

இத்தலத்திற்குக் கோயில், மகா சிவலோகம், பூலோக கயிலாயம், சிதாகாச க்ஷேத்திரம், சிற்றம்பலம், பொன்னம்பலம், புலியூர், பெரும்பற்றப் புலியூர், தில்லைவனம் முதலிய பலவேறு திருப் பெயர்களுள.

கோயில்:—இறைவனுர் இருக்கையைக் கோயில் என்பது. அது, தன்னுள் எழுந்தருளியுள்ள மூர்த்திகட்கு

எண்ணும் இதயத்தில் நீயிருந்தால், இவ்வுலகர்
பண்ணுகின்ற நிலைகளென் பார்வைக்குத் தோன்ருவே.

ஏற்பப் பலப் பெயர்கள் கொள்ளும். சிவனார் எழுந்தருளி யிருப்பது சிவன் கோயில். பிள்ளையார்க்குரியது பிள்ளையார் கோயில். காளியிருப்பது காளி கோயில் என வழங்குவது காணலாம். பெரிய கோயில் எனக் கூறினால் ஸ்ரீ வைணவ மரபின்படி, அது திருவரங்கத்தைக் குறிக்கும். அடை மொழி ஒன்றும் இன்றியே **கோயில்** என்று மட்டும் கூறி னால் சைவ மரபின்படி கூத்தப் பெருமான் எழுந்தருளி யுள்ள சிதம்பரத்தையே குறிக்கும். சிதம்பரத்தைக் குறித் தோதுவன கோயில் திருவிருத்தம், கோயில் நான்மணி மாலை, கோயில் புராணம் எனப் பெயர் பெற்றுள்ளமை நோக்குக. எல்லாச் சிவ தலங்களிலுள்ள கோயில்களுக் கும், இத்தலக் கோயில் முதன்மைச் சிறப்பு வாய்ந்தது என்பதற்காக இப்பெயர் வழங்குகிறது.

மகா சிவலோகம் : பூலோக கயிலாயம்

தண்துளபந் தரித்த சக்கரபாணியின் உலகம் முதலிய நவலோகம் கடந்துள்ள சிவலோகச் சிறப்பனைத்தும் இத் தலத்துக்கு இருப்பதாலும், மண்ணுலகில் யாவரும் தரி சிக்க முத்தி தரவல்லதாகவும் விளங்கும் காரணத்தால் **மகா சிவலோகம், பூலோக கயிலாயம்** எனக் கூறப்படும்.

சிதாகாச க்ஷேத்திரம்:—

பிரம்மாண்டம் என்றது பிரமபுரம். அதில் தில்லை வனம் என்பது புண்டரீக (இதய தாமரை) வீடு (இருக்கை) ஆகும். இங்குள்ள ஆகாசம் 'சித்' என்னும் ஞானமே. ஆகையால் இத்தலம் சிதாகாச க்ஷேத்திரமாகும். மேலும் உலகமாகிய விராட் புருடனுடைய இதய தாமரை இத் தலம் என்ப.

சிற்றம்பலம் :—

சிறு + அம்பலம் = சிறு + சபை என்பதாம். சிறியது என்பது நுட்பமானது. அல்லது அதிசூக்குமம் ஆனது என்று கொள்க. சைவ சித்தாந்திகள் அண்டத்தையும்

புல்லையே காட்டும் பாழ்வறுமை நீரசுரு
சொல்லையே சொல்லியெனைச் சுகமுறுத்தல் என்றேயோ.

பிண்டத்தையும் விரிவாக ஆராய்ந்து அவற்றிற்கு மூல காரணமாயுள்ள தத்துவங்கள் முப்பத்தாறு என்றும், அவை உயிர் (ஆன்மா) உணர்வு (வித்தியா) இவ்விரண்டையும் இயக்கும் ஒளி (சிவம்) என மூன்று பிரிவில் அடக்குவர். உயிர் (ஆன்ம) தத்துவங்கள் 24; உணர்வு (வித்யா) தத்துவங்கள் 7; சிவ தத்துவங்கள் 5. ஆக 36 ஆகும். இத் தத்துவங்களாகிய அறிவற்ற (சடப்) பொருள்களை இயங்கச் செய்தற்கு அவற்றில் ஒன்றாய் உடனாய் கலந்து இறைவன் (சித்துப் பொருள்) தானே அசைந்தாடுகிறான். அதற்குரிய இடமாக அல்லது அந்த நடனத்திற்கு உரிய அரங்கு—அம்பலம்—சபையாவது உட்கரணம் முதலிய அதிசூக்கும தத்துவங்களே. எனவே அதுவே சிறு + அம்பலம்—சிற்றம்பலம் எனப்படும். மிக நுட்பமான தத்துவம் சித்து—ஆன்ம அறிவு. ஆதலின் அதனில் இறைவனது இயக்கம் காணப்படும்போது அதனைச் சிற்சபை—அறிவு + அம்பலம் என்பர். இத்தகைய பிண்டச் செய்திகளை (உள்முகச் செய்திகளை) அண்டத்தில் (வெளிமுகத்தில், அறிவிக்கவே துணை செய்வது சிற்றம்பலமாகும். சிற்றம்பலம்—ஆன்மாக்களின் அறிவுக்கு அறிவாய் இருந்து ஆடும் அற்புத ஞானக்கூத்து நிகழிடத்தை நினைவுறுத்தும். இதனை அருள்மூலங் கண்ட திருமூலர்,

> "பற்றுக்குப் பற்றாய் பரமன் இருப்பிடம்
> சிற்றம்பலம் என்று தேர்ந்து கொண்டேனே"

பொன்னம்பலம் :—

சிதம்பரத்திலுள்ள திருக்கோயிலிலுள்ள நடராசர்க்கு திருமுழுக்காட்டு நிகழும் பகுதிக்கு இப்பெயர் உண்டு. இதனை ஐயடிகள் காடவர்கோன் அல்லது இரண்யவர்மன் என்னும் கௌட தேசப் பேரரசரும், முதலாம் பராந்தக சோழரும் பொன் வேய்ந்தமையால், இதற்குக் கனகசபை, பொற்சபை அல்லது பொன்னம்பலம் எனப் பெயர்களுண்டு. அதன்றியும், நம்பனார் நடமாடிய சபைகள்

ஆண்டான்நீ யாக, அடியேனைத் தாள்நிழலில்
வேண்டா எனத் தள்ளில் வேறுபுகல் ஏதையா.

வெள்ளியம்பலம் (மதுரை), தாம்பர அம்பலம் (திருநெல்வேலி), இரத்னம்பலம் (திருவாலங்காடு), சித்திரம்பலம் (திருக்குற்றாலம்) என்ற வரிசையில் பொன்னம்பலம் (சிதம்பரம்) சிறப்புடையதாகும்.

புலியூர் :—

மத்தியந்தன முனிவருடைய மகனாய்ப் பிறந்து தந்தையாரால் மலரெடுத்து வழிபடும் நியமம் பூண்டார் ஒரு முனிவர். அவர் இரவில் வண்டு மொய்த்து எச்சில் செய்யாத மலர்களை எடுக்கவும், மரம் ஏறும்போது வழுக்கி விழாமலிருக்கவும் தவஞ் செய்து, கரங்களிலுள்ள நகங்களில் கண்களும், புலியின் கால்களும் பெற்றனர். இவரைப் "புலிப்பாதன்" "புலிக்கால் முனிவர்" வியாக்ரபாதர் என்றும் கூறுவர். இவர் வழிபட்டதால் சிதம்பரத்திற்குப் புலியூர் என்றும், இவர் பெரும் பற்று வைத்துச் சிவ தாண்டவங் கண்டருள் பெற்றமையால் பெரும்பற்றப் புலியூர் எனவும் பெயர்கள் வந்தன.

தில்லை வனம்:—

தில்லை என்பது ஒருவகை மரத்தின் பெயர். அவ்வித மரங்கள் அதிகம் வளர்ந்துள்ள இடமாதல் பற்றி இத்தலத்துக்குத் 'தில்லை', 'தில்லைவனம்' எனவும் திருநாமங்கள் வந்தன. கோயில் புராணத்தின்படி,

நமது உடல்—பிரமாண்டம்.
அதில் இடைகலை நாடி—இலங்கை
பிங்கலை நாடி—இமயமலை
சுழுமுனை நாடி—தில்லையம்பதி

நமது உடம்பில் இடைகலை பிங்கலை நாடிகள் இருபுறங்களிலும் சஞ்சரிக்க, சுழுமுனை நாடி நடுநாடியாக ஓடும். உள் முகத்தில் சுழுமுனையில்தான் பெருமான் திருநடம் நடக்கிறது. அந்த நடுநாடித் தலமாக புறமுகத்தில் காணத்

காற்றுளும் மோதும் கன்மத்தாலும் அவியா
ஊற்றுன தீபமென் உள் விளங்கக் காணேனே.

தக்கது தில்லைவனம். ஆகவே அத் தில்லையில்தான் நாதனார் இயற்றும் நடனமும் நடைபெறுகிறது.

மேற் போந்த திருநாமங்களிற் பல அருணகிரியார் திருவாக்கில் பயன்றுள்ளமை காண்க.

"மாந்தண்ணரும் வனம்குயில் கொஞ்சிட
தேங்குவாழை கரும்புகள் விஞ்சிடு
வான்குலாவு சிதம்பரம் வந்தருள்—செக்கைவேலா"
"அண்டர்புகழ் செம்பொன் னம்பலத்தாடும்
அம்பலவர்—தம்பிரானே"
"திருச் சித்தந்தனிலே குறமானதை
இருத்திக் கண்களிகூர் திகழ்ஆடக
திருச்சிற்றம்பலம் மேவி யுலாவிய—பெருமானே"
"இமையவர் முநிவர் பரவிய புலியூரினில்
நடமருவு—பெருமானே"
"பிரிந்திட்டும் பரிவாகிய ஞானிகள்
சிலம்பத் தக்கழல் சேரவே நாடிடு
பெரும்பற்றப் புலியூர்தனில் மேவிய—பெருமானே"
"தெள்ளுதமிழ் பாடியிட் டாசைகொண் டாடசசி
வல்லியொடு கூடிதிக் கோர்கள்கொண் டாடஇயல்
தில்லைநகர் கோபுரத் தேமகிழ்ந் தேருலவு—பெருமானே"

மூவகைத் திருமேனி :—

மேலே கூறிய பலவகைத் திருநாமங் கொண்ட சிதம்பரத்தில் இறைவனார் மூவகையாகும் திருமேனிகளையும் ஒருங்கு காட்டும் சிறப்பு மகிழத் தக்கதாம். (1) பிரானார் தமக்கு உரிய சொந்த நிலையாவது உருவமே இல்லாத அருவநிலை. அது யாராலும் அறியொண்ணுநிலை. (2) அறிவருந் தன்மையனான இறைவன் உயிர்கட்கு அருளுமாறு எளிவரும் தன்மையில் உண்டாவது உருவநிலை.

"அகளமாய் யாரும் அறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற
தானாகத் தந்ததென் றுந்தீபற (திருஉந்தி)

(3) இவ்விரண்டு நிலையும் கலந்த நிலை அருவுருவமாகும் என்ற உண்மையினை,

---

ஆசையே காட்டியெனை யடர்க்கின்ற மாயைதனை
மோசம்செய் துன்னடிதான் மோந்துகொளச் செய்யாயோ.

"உருமேனி தரித்துக்கொண்ட தென்றலும் உருவிறந்த
அருமேனி யதுவுங்கண்டோம் அருவுரு வானபோது
திருமேனி உபயம்பெற்றேம் செப்பிய மூன்றும் நந்தம்
கருமேனி கழிக்கவந்த கருணையின் வடிவுதானே"

என்று சிவஞான சித்தியார் கூறுவதுணர்க.

இவ்வித மூன்று நிலைகளையும் சிதம்பரம் ஒருங்கு காட்டுகிறது. சிதம்பரத்தில் ஆனந்த நடேசரது வலது பக்கத்தில் உள்ளது சிதம்பர ரகசியம். இதில்தான் மந்திர ஸ்வரூபமாகிய திருவம்பலச் சக்கரம் உள்ளது. இது இறைவனது (நிட்கள) அருவத் திருமேனியை விளக்கும். இதற்கிட்டிருக்கும் திரையின் வெளிப்பகுதி கறுப்பு நிறத்தால் திரோதானம் என்ற மறைப்பு சத்தியையும், உட்பகுதி சிவப்பு நிறத்தால் அருட்சத்தியையும் நினைப்பூட்டும் அருமை பாராட்டத் தக்கது. இனி, இன்பக் கூத்தனர் திருவுருவம் பெருமானது சகள (உருவ)த் திருமேனியை உணர்த்தும். ஸ்படிகலிங்க மூர்த்தியாகும் அழகிய திருச்சிற்றம்பலமுடையார் நிட்கள சகள (அருவுருவ)த் திருமேனியைக் காட்டா நிற்பர். எனவே பெருமானை அருவாகவும் உருவாகவும் அருவுருவாகவும் ஒரே இடத்தில் காண்பது அரிதல்லவா!

மூர்த்தி, தலம், தீர்த்தத்தாலும் சிதம்பரம் சிறந்துள்ள தன்மையை அடுத்த இதழிற் காண்க. (தொடரும்)

திருத்தணிகைத் திருப்படி திருவிழா

1956, டிஸம்பர் 31ஃ

இந்நன்னாளின் வரவை சென்னை அடியார்களும் மற்ற ஊர்களிலுமுள்ள பக்தர்களும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள்.

திங்கட்கிழமை தனியாக அமைக்கப்பட்ட ரயில் தொடர் சென்னையிலிருந்து காலை 7-20-க்குப் புறப்பட்டு

மந்திரமே நின்மேனி யென்பார்கள்; மன்மனத்தில்
தந்திரமா யெண்ணியதைத் தழுவுறுநாள் என்றோயோ.

10 மணிக்குத் திருத்தணிகையிற் சேர்ந்தது. ஒவ்வொரு வண்டியிலும் பஜனை முழக்கமாக இருந்தது.

திருத்தணிகை ரயிலடியிலிருந்து திரு. திருப்புகழ் மணி. முருகதாஸ் அவர்கள் அடியார்களைப் பஜனை நாமாவளியில் ஈடுபடச் செய்து மலையடிவாரம் சேர்ந்தனர். மற்றும் பல பஜனை கோஷ்டிகள் திருவீதிகளில் திருப்புகழ் பஜனை நிகழ்த்தினர்.

மாலை திருப்படி விழா வெகு விமரிசையாக நடந்தேறியது. எங்கும் திருப்புகழ் முழக்கத்தில் அடியார்கள் தன் வயம் அழிந்து மூழ்கினர்.

காலையில் சென்னையிலிருந்து "அடியார் திருக்கூட்ட இறைபணி மன்றத்தினர்" சுமார் 250 பக்தர்கள், 6 படை வீடுகளின் பெயர் தாங்கிய 6 பஸ்களின் உதவியுடன் திருவான்மியூர், திருப்போரூர், திருக்கழுக்குன்றம், குரு பழநி (மதுராந்தகம்—மாம்பாக்கம்), காஞ்சீபுரம் முதலிய தலங்களில் பஜனை, சொற்பொழிவுடன் இறை வழிபாடு செய்துகொண்டு, யமுனை கங்கையுடன் சேர்வதுபோல், இரவு 2 மணிக்குத் திருத்தணிகைப் படிவிழாவை நடத்தி காலை சென்னை திரும்பினர்.

குருபழநியில் திருப்புகழ் விழா விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. வழக்கம்போல் காஞ்சி குமர கோட்டத்தில் பெருத்த அடியார் திருக்கூட்ட உணர்ச்சி ததும்பியது. டிஸம்பர் 31ஆ திருத்தணிகைப் படிவிழாவின் அரிய உணர்ச்சியை இம்மன்றத்தினர், அன்று சென்றவிட மெல்லாம் ஆங்காங்குக் குழுமிய அடியார்களுக்கும் மக்களுக்கும் ஊட்டவே இவ்விதம் ஆண்டுதோறும் செய்து வருகின்றனர்.

இவர்களுடன் திரு. கி. வா. ஜகந்நாத அய்யர், ரசபதி, குருகுல ஆசிரியர் இளவழகனர் அவர்களும் கலந்து

சூதும் வாதும் நிறைந்த சூழ்ச்சியே வாழ்க்கையெனில்
ஏதொன்றும் பேசாமல் இறக்கஅருள் எம்மானே.

கொண்டு, அருளின்ப வெள்ளம் கரைபுரண்டோடச் செய்தனர்.

இவ்விழா இப்பொழுதுதான் முடிந்தபோதிலும், மீண்டும் எப்பொழுது வருமென்ற ஆவலை உண்டாக்கு கிறது.

ஜனவரி முதல் தேதி செவ்வாய்க்கிழமை திரு. சோளிங்கபுரத்திலும் திருப்படி விழாவை நடத்திய திருப்புகழ்மணி அவர்கள், அடியார்களுடன் சிறப்பாக மலையேறி மக்களை மகிழ்வித்தனர்.

"திருப்புகழ் ஓதும் கருத்தினர் சேரும் திருத்தணி மேவும் பெருமாளே! படிமீது துதித்துடன் வாழ அருள் வாயே."

—(அருணகிரிநாதர்)

அனுபூதி விளக்கம் 8

உல்லாச சல்லாபம் —14

(கி. வா. ஜ.)

முருகப் பெருமானுடைய சல்லாபங்களைப் பாராட்டப் புகுந்த அருணகிரிநாதர் முதலில் அவனுடைய உல்லாச சல்லாபத்தை நினைக்கிறார். மனிதனுக்கு எப்போதும் இன்பத்திலே கண். அதனை அடைவதற்கு என்னவழி என்று தேடிக் கொண்டே இருக்கிறான். ஒவ்வொரு நாளிலும் இருபத்துநாலு மணி நேரமும் உல்லாசமாகவே கழிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறான். 'வாழ்நாள் முழுவதுமே இன்பம் நிரம்பி யிருக்கவேண்டும். ஒரு நாளில் ஒரு கணம்கூட உல்லாசமின்றி இருக்கக்கூடாது' என்ற பேராசை அவனுக்கு உண்டாகிறது. ஆனால் அப்படி இருப்பது சாத்தியமா? சாத்தியமானால் அதற்கு என்ன செய்ய வேண்டும்?—இது தெரியாமல் திண்டாடுகிறான்.

வஞ்சனை யாமுடலம் வாடி யழியுமுனே
கொஞ்சி யுனைப்பாடி மெய்ப்பரிசு கொள்வேனோ.

உல்லாச வாழ்வு என்று உலகில் நினைப்பது எக்காலத்திலும் இன்பம் தருவது ஆகாது. உல்லாசம் என்பது பெரு மகிழ்ச்சி. மகிழ்ச்சி அல்லது இன்ப உணர்ச்சி மனத்திலே நிகழ்வது. ஐம்புலன்களின் வாயிலாக உண்டாகும் இன்பமே மனத்தில் சார்ந்து இன்ப உணர்ச்சியை உண்டாக்குகிறது. புலனுகர்ச்சியினால் வரும் இன்பம் நிலையாதது; இன்பம் போலத் தோற்றுவதன்றி உண்மையான இன்பம் அன்று.

ஆதலின் எக்காலத்திலும் இன்ப உணர்ச்சி இருக்க வேண்டுமானால் அந்த இன்பம் பொறிகளின் வாயிலாக வருவதாக இருக்கக் கூடாது. இறைவன் திருவருளால் வரும் இன்பமே நிலையானது. அந்த இன்பம் பெற்றாருக்குத் துன்பம் தலைகாட்டாது. இந்த உடம்போடு வாழ்ந்தாலும் பொறிகடந்த இன்பம் அவர்களுக்கு உரிமையாகும்.

"இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை"

என்று அப்பர் சுவாமிகள் சொல்லும் நிலை அது. அப்போது மனம் சிதறாது; நெறிதவறாது; செயலிழந்து நிற்கும்.

போக்கும் வரவும் இரவும் பகலும்
புறம்பும் உள்ளும்
வாக்கும் மனமும் வடிவும்இல் லாதொன்று
வந்துவந்து
தாக்கும்;மனோலயம் தானே தரும்; எனைத்
தன்வசத்தே
ஆக்கும்; அறுமுகவா! சொல்லொணா திந்த
ஆநந்தமே!"

என்று தாம் பெற்ற உல்லாஸத்தை அருணகிரிநாதர் கந்தர் அலங்காரத்தில் சொல்கிறார்.

ஆணவத் தாலெதுவும் அடியேன் புரியாமல்
தானுநீ காட்டுநெறி தான்சாரச் செய்யாயோ.

இத்தகைய உல்லாஸ வாழ்க்கையை, இன்பமேயன்றித் துன்பங்காணாத வாழ்க்கையைப் பெற வழி காட்டுகிறவன் முருகன். தன்னை நினைப்பாரின் உள்ளிருந்து பேசி இன்பம் விளைக்கிறவன். பேசாத பேச்சினால் அவன் சல்லாபம் செய்யக் கேளாத காதினால் அவைகளை கேட்கிறார்கள். அருணகிரிநாதர் அப்படிக்கேட்ட பெரியார். "நீ இவ்வாறு எல்லாம் சொன்னதை நான் மறவேன்" என்று திருப்புகழில் பல இடங்களில் சொல்கிறார். தமக்கு நேரே நின்று ஒருமனிதன் பேசுவது போலப் பேசிக் கேட்டது அன்று அது. முறுகிய அன்பினால் நெஞ்சு நெகிழ்ந்து பசுகரணங்கள் மாறிப் பதிகரணமாகிய போது இதே உடம்பு சிதாகாச வெளியுள்ள குடமாகிறது. அப்போது இறைவன் உள்ளிருந்து பேசுகிறான்.

அந்த நிலையைக் கற்பனையினால் எண்ணிப் பார்ப்பது அரிது. மகாத்மா காந்தியடிகள் அடிக்கடி "உள்ளொலி" என்று கூறுவார். "என் அந்தராத்மாவின் பேச்சு" என்று கூறுவார். அவரைக் காட்டிலும் பன்மடங்கு இறைவன் திருவருளில் ஊறித் திளைத்த பெரியோர்கள் இந்நாட்டில் இருந்திருக்கின்றனர். இறைவனுடைய சல்லாபத்தைக் கேட்டிருக்கின்றனர்.

பிறர் அறியாமல் உலவும் ஒருவரோடு பேச வேண்டுமானால் நாலு பேருக்கு நடுவில் அவரை வைத்துப் பேசுவது முறையன்று. ஒருவருக்கும் தெரியாமல் அவரை அழைத்துச் சென்று தனியிடமாக, யாரும் வராத இடமாகப் பார்த்து அங்கே மிகத்தாழ்ந்த குரலில் இரகசியமாகப் பேசுவார்கள். முருகன் யாரும் அறிதற்கரிய கள்வன். அவனோடு பேசும் பேச்சை ஒலிபெருக்கி வைத்தா பரப்புவார்கள்? தம்முடைய இருதயக் குகையூடே தகராகாச அறையில் குகனோடு பேச வேண்டும். அங்கே அவன் வந்து பேசுவான்.

புல்லறிவால் செய்கை புரியாமல், நீடதவும்
நல்லறிவால் நானழிய நம்பா அருளுதியோ.

இனி உனக்குத் துன்பமே இல்லை; உன் வாழ்வு முழு வதும் உல்லாச சல்லாபம் செய்வான்.

இந்த நுட்பமான கருணையையே அவன் வள்ளி நாயகி யிடம் காட்டினான். யாரும் அறியாமல் அப்பிராட்டியை அவர் உறவினர்களிடமிருந்து எடுத்துச் சென்று தணிகை மலைக்குகையில் அவளோடு அளவளாவினான். அதுகாறும் பேச முடியாமல் தவித்தானே, அந்தப் பேச்சை யெல்லாம் இப்போது பேசினான்; உல்லாசமாகப் பேசினான்; விதவித மாகச் சல்லாபம் செய்தான்.

சிற்றின்பத்துறையில் ஈடுபடும் காதலன் தன் காதலி தனிமையில் எத்தனை விதமான உல்லாச சல்லாபத்தைச் செய்கிறான்! முருகன் அதில் குறைந்தவனா? அவனுடைய உல்லாச சல்லாபத்தைக் கேட்ட பெருமாட்டி வள்ளி. அவளுக்கு அடுத்தபடியாகக் கேட்ட தேவி தேவயானை. அவனுடைய அடியார்கள், அவனுடன் ஏகபோகமாய் ஒன்றி இன்புறும் அன்பர்கள், அந்தச் சல்லாபத்தைக் கேட்கிறார்கள்.

இப்படிச் சல்லாபம் செய்வது அவனுக்கு விளை யாட்டு; விநோதம். அவன் உல்லாச விதச் சல்லாப விநோ தன்; மகிழ்ச்சியைத்தரும் பலவகையான பேச்சை விளை யாட்டாகவே நடத்துகிறவன். "இப்படியெல்லாம் பேச்சு விளையாட்டிலே சிறந்து நிற்பவன் நீ அல்லவா? எனக்கு இதைச் சொல்லப்பா!" என்று வேண்டுகிறார் அருண கிரியார்.

உல்லாச......விதச்
சல்லாப விநோதனும் நீ அலையோ?
எல்லாம் அறஎன்னை இழந்தநலம்
சொல்லாய்.

(தொடரும்)

மூடமே யாகி மூடங்காமல், உன்மோன
வேடமே சித்திக்கும் மேதையெனச் செய்யாயோ.

பழநித் திருப்புகழ்

விரிவுரை

(குகஸ்ரீ)

போத கந்தரு கோவே நமோநம
நீதி தங்கிய தேவா நமோநம
பூத லந்தனை யாள்வாய் நமோநம பணியாவும்-

பூணு கின்றபி ரானே நமோநம
வேடர் தங்கொடி மாலா நமோநம
போத வன்புகழ் ஸாமீ நமோநம அரிதான;

வேத மந்திர ரூபா நமோநம
ஞான பண்டித நாதா நமோநம
வீர கண்டைகொள் தாளா நமோநம அழகான-

மேனி தங்கிய வேளே நமோநம
வான பைந்தொடி வாழ்வே நமோநம
வீறு கொண்டவி சாகா நமோநம அருள்தாராய்;

பாத கஞ்செறி சூராதி மாளவெ
கூர்மை கொண்டயி லாலே பொராடியெ
பார அண்டர்கள் வானுடு சேர்தர அருள்வோனே!

பாதி சந்திர னேசூடும் வேணியர்
சூல சங்கர னார்கீத நாயகர்
பார திண்புய மேசேரு சோதியர் கயிலாயர்;

ஆதி சங்கர னார்பாக மாதுமை
கோல அம்பிகை மாதா மனோமணி
ஆயி சுந்தரி தாயான நாரணி அபிராமி-

ஆவல் கொண்டுவி றாலே சிராடவெ
கோம ளம்பல சூழ்கோ யில்மீறிய
ஆவி னன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே!

பேதையாய்க் கண்ட பிதற்றித் திரியாமல்
மேதையராம் ஞானிகளை மேவுறுநாள் வந்துறுமோ.

(பாதகம்—மாள—அருள்வோனே.)

(பதவுரை:) பாதகம் செறி சூர் ஆதி மாளவெ—மாபெரும் தீவினையே நிறைந்த சூரபதுமன் முதலான (ஆணவ முழுமையர்) மாண்பு கெட்டு அடங்க;

கூர்மை கொண்ட அயிலாலே பொராடியெ—கூர்மை மிக்க (ஞான) வேலால் (நீடித்துப்) போர் நிகழ்த்தி;

பார அண்டர்கள் வாழுடு சேர்தர அருள்வோனே—அளவிறந்த அமரர், (புண்ணிய) விண்ணுலகை அடைய அருள் பாலித்தவனே!

(பாதி சந்திரனே—பெருமாளே.)

பாதி சந்திரனே சூடும் வேணியர்—தகுதியுடைய பிறைத் திங்களைத் தரித்த (முதன்மைச்) சடைமுடியர்;

சூல சங்கரனார்—(முத்தலைச்) சூலம் ஏந்திய முதல்வர்; கீத நாயகர்—இசையில் நடமாடும் இறைவர்;

பார திண் புயமே சேரு சோதியர்—மகிமைத் திண்மைத் தோள்கள் மலிந்து, பெருகி யெழுகின்ற பேரொளிப் பிழம்பினர்;

கயிலாயர்—திருக் கயிலாயத்தில் நியதம் இடுபவர்;

ஆதி சங்கரனார் பாக மாது—(நல்லுயிர்களை) இளைப்பாற்றும் முதன்மையான நம்பருடைய (இடப்) பாகத்தில் இருக்கும் எம் பெருமாட்டி;

உமை—பிரணவ வடிவி; கோல அம்பிகை—(அண்டங்களை அடுக்கி) செயற்கைப் புனைவு செய்யும் அம்மை; மாதா—, மனோன்மணி—, ஆயி—, சுந்தரி—, தாயான நாரணி—, அபிராமி—;

ஆவல் கொண்டு விருலே சிராட—ஆர்வம் மிகுந்து பெருமிதத்துடன் (பாராட்டிச்) சீராட்ட (அதையேற்று);

கோமளம் பல சூழ் கோயில் மீறிய—பசுமை காட்டும் பல ஆலயங்களுள் (பயனால்) சிறந்த;

ஆவினன் குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே—திருவாவினன் குடிப் பதியில் வாழ்வு பெற்ற தேவர்கள் (போற்றும்) பெருமையிற் சிறந்த பெரியோனே!;

(போதகம் தரு—விசாகா நமோநம)

போதகம் தரு கோவே நமோ நம—பதி ஞானம் பாலிக்கும் பரனே! (உமக்கு) வணக்கம்; ஓம் வணக்கம்;

தீதனைத்தும் தீர்ந்து திருவார்ந்த நின்பெருமை
ஓதுகின்ற உத்யோகம் உவக்க அருளுதியோ,

நீதி தங்கிய தேவா நமோ நம—நீதியின் நிலயமான (நியதித்) தெய்வமே! (உமக்கு) வணக்கம்; ஓம் வணக்கம்!

பூ தலந்தனை ஆள்வாய் நமோ நம—பூவுலக ஸ்தலங்களை ஆளும் பூபதியே! (உமக்கு) வணக்கம், ஓம் வணக்கம்!

பணி யாவும் பூணுகின்ற பிரானே நமோ நம—(இன்ப அன்பர் செய்) எப்பணிகளையும் அணியாக ஏற்று, நீக்காமல் (அப்பணி களின் நடுவில்) நிற்பவனே! (உமக்கு) வணக்கம்; ஓம் வணக்கம்!

வேடர்தம் கொடி மாலா நமோ நம—(உணர்வால் தழுவும்) குறவர் குலக்கொடியான வள்ளியாரிடத்து, கூடும் மால் கொண்ட கொழு கொம்பே! (உமக்கு) வணக்கம்; ஓம் வணக்கம்!

போதவன் புகழ் ஸாமீ நமோ நம—(உலகம் படைக்கும்) மலரயன், (சிறக்கப்) புகழ்ந்து ஏத்தும் செல்வமே! (உமக்கு) வணக் கம், ஓம் வணக்கம்!

அரிது ஆன வேத மந்திர ரூபா நமோ நம—பொருள் (காண் டற்கு) இயலாத (தெய்வ) வேத மந்திரத் திருமேனி யானவரே! (உமக்கு) வணக்கம்; ஓம் வணக்கம்;

ஞான பண்டித நாதா நமோ நம—(நலம் சிறந்த) மெய்ஞ் ஞான பண்டிதருள், நாத நலம் ஆனவரே! உமக்கு வணக்கம்; ஓம் வணக்கம்!

வீர கண்டை கொள் தாளா நமோ நம—வீரக் கழலை அணிந்த (விமலமான) திருவடி யுடையாய்! (உமக்கு) வணக்கம்; ஓம் வணக்கம்!

அழகு ஆன மேனி தங்கிய வேளே நமோ நம—சௌந்தர்ய சிகரமான திருமேனி கொண்டிருந்த (செவ்) வேள் பெருமா! (உமக்கு) வணக்கம்; ஓம் வணக்கம்!

வான பைந் தொடி வாழ்வே நமோ நம—தேவலோகத்தில் இருந்த பசுமை வளையலணி தேவயானையின் மணவாளா! (உமக்கு) வணக்கம்; ஓம் வணக்கம்!

வீறு கொண்ட விசாகா நமோ நம—(விசாலமான) பெரு மிதம் கொண்ட விசாகப் பெருமானே! (உமக்கு) வணக்கம்; ஓம் வணக்கம்!

அருள் தாராய்—(பிரபோ! எளிய எனக்குப் பயனுள உமது) திருவருளைப் பாலிப்பீராக, (எ—று).

பேயாகி நாயேன் பித்தேறித் தாழாமல்
தாயாகி நீகாத்தால் தடுப்பவரும் உண்டேயோ.

விளக்கம்.

ஆன்மா என்ற ஒரு பொருள் இல்லை. பந்த பாசம் என்பது மயக்கு வார்த்தை. பாவ புண்ணியம் என்பதெல்லாம் ஏமாற்றும் மொழிகள்! அதன் அளவு சுக துக்கம் என்பது அறிவீனம். இது தருமம், அது அதர்மம் என்று பேசுவதே பேதமை. வாழும் தேவர்களை வருத்து! படரும் அவர் செல்வங்களைப் பறிமுதல் செய்! மேலேறு! அண்டங்களை யெல்லாம் அடிமைப் படுத்து! தேவரும் முனிவரும் உன் ஏவலர்கள்; நல்லதல்ல என்று சொல்வார் பேச்சைக் கேளாமல், அவர்களை நறுக்கு! தடுப்பார் தலையைத் தள்ளிவிடு! கொலை, பாதகம் என்று கொள்ளாதே. இப்படி யெல்லாம் செய்தால் முன்னேறலாம்; மறவாதே என்று, **சூரன் முதலானோர்க்குச் சுக்கிரர் உபதேசித்தார்.**

அதன் பயனாக, குபேர பட்டணத்தை அசுரர் கொள்ளையிட்டனர். புண்ணியம் செய்தவர் சென்றடையும் பொன்னுலகத்தைப் பொசுக்கினர்; அக்கினியை அலறச் செய்தனர்; புனித இயமனைப் புடைத்தனர்; வருணனை வாயுவை வருத்தினர்; பாதல உலகரைப் பாழ்ப்படுத்தினர்; வானவரைச் சிறையில் அடைத்தனர்; கட்டி யடித்தனர். அதனால், அகில உலகமும் கதறி அழுதது. ஆயிரத்து எட்டு அண்டங்களையும், அசுரர்களே கட்டி ஆண்டனர். அந்த ஆட்சியில், காமம் கனன்றது. குரோதம் கொதித்தது. உலோபம் உயர்ந்தது. மோகம் முறுவலித்தது. மதம் திமிதம் இட்டது. வாற்சல்யம் காட்டி மாற்சல்யம் வளர்ந்தது. நிலமகள் நெளிந்தாள்; பூமகள் புழுங்கினாள்; நாமகள் நடுங்கினாள். எம்மான் அது பொறுது எழுந்தான்.

படபடத்த அவுணர்களை, அருள்ஞான வேல் கொண்டு அடக்கினான். வாழும்படி, அமரர்களைப் பொன்னுலகில் வைத்தான். நியதியான நீதி நிலைத்தது. வழிபடுவார்க்கு, சுக்கிர உபதேசத் தொல்லை வாராதபடி, போதகம் தரு கோவாகிப் பூதலந்தனை ஆள்கிறான். (பூ + தலம் - நிலவுலகில் உள்ள புண்ணிய ஸ்தலங்கள்.)

படிப்பால் வந்த ஞானம் பாச ஞானம்; நானே முதல்வன் என்று நம்ப வைத்த ஞானம் பசு ஞானம். வரத குமரன் திருவடிகளை வழிபட்டு, சிறக்கும் ஞானம் சிவஞானம்; அதுவே **போதகம்.** இப்போதகம், ஞானவேழம் என்றும் நவிலப் பெறும். திருஞான வேழ வகுப்பு ஒன்றும் பாடியுளர் நம்முனிவர். ஞானவேழத்தில் ஏறினோர், காலனை எதிர்ப்பர்; காமனைக் கடிவர். மோதும் வினைகளை முறிப்பர். இவைகளை விரித்து அவ்வகுப்பு விளக்குகின்றது. அமைதி விளைய, சிவஞான உபதேசம் செய்பவன் சிவகுமரன்.

அண்ணா அரசே அமுதே அடைக்கலங்காண்
கண்ணாளா கற்பகமே காவாய்நீ காவாயே.

மேலுரைத்த செய்திகளை, ஐந்தாம் அடியும் முதலடியும் அறிவிக்கும் அருமையே அருமை.

(1) அருள் ஞான யோகிகட்கு அமுது உதவ, வளராமல் தேயாமல் வளர்பிறை, எம்பிரான் சடையில் வாழ்கிறது.

(2) இச்சை, கிரியை, ஞானம் என்னும் முத்தலைச் சூலம், தம் பெயர்க்கு ஏற்ப, உயிர்கட்குப் பேருதவியைப் புரிகிறது.

(3) சர்வ சம்மாரத்தின் பின், பரந்த உலகை மீட்டும் படைக்க, சிறந்த இசையை எழுப்புகிறார் சிவபெருமான். "வருங்கடன் மீள நின்று, எம்மிறை வீணை வாசிக்குமே" என்ற அப்பர் தேவாரம், இங்கு எவர் நினைவிலும் எழும். இசையால் உந்தப் பெற்ற அணுக்கள் அனைத்தும், உருண்டு திரண்டு உலகாகும்.

(4) எவ்வுயிரையும் காக்க, எண்திசை அளாவும் எட்டுத் திருத்தோளர், பேரொளிப் பிழம்பான அப்பெருமான்.

(5) அன்றும் இன்றும் நீலகண்டர், அப்ராக்ருத கயிலாயத்தில் அமர்ந்துளர்.

(6) முத்தான்மாக்களை இளைப்பாற்றும் முதல்வ ராதலின், அந்த அமலர், ஆதி சங்கரர் என்றும் அறிவிக்கப் பெறுகிறார்.

இந்த ஆறு செய்திகளும், அருளார்ந்த சிவ பராக்ரமத்தை அறிவிக்கின்றன.

(1) அப்பெருமான் இடப்பாகத்தில் மாது இருக்கின்றாள்.

(2) அத்தேவி, பிரணவ மேனியளாதலின், உமையெனப் பெறுவள்.

(3) காணப்படு பொருள் அனைத்தும், அவள் சிலமான கோலம். ஆதலின், அம்மையை, கோல அம்பிகை என்று குறிப்பிடுகிறார்.

(4) காரண தேகத்தில் மாதா.

(5) சூக்கும உடலில் ஆயி.

(6) தூல உடலில், புருஷ கோலம் கொண்ட நான்காம் சத்தியாதலின், தாயான நாரணி என்றார்.

(7) மனத்தில் உன்மனை கலையா யெழுதலால், மனோன்மணி.

(8) சௌந்தர்ய சிகரமான தாயைச் சுந்தரி என்றார்.

மண்ணார்ந்த வாழ்வை மதியேன்: நின் பொன்னடியே
எண்ணார்ந்து நிற்குமிந்த ஏழைமுகம் பாராயோ.

(9) பார்த்தவர் பிறிதொன்றைப் பாராதபடி, ஈர்த்துத் தன் திருவடியில் இருத்தும் பேரழகின் பெருமாட்டியை, அபிராமி என்றார்.

ஈசானம், தற்புருடம், வாமம், அகோரம், சத்யோஜாதம், அதோமுகம் எனும் ஆறு திருமுக அம்மான் பராக்மத்திற்கேற்ப இந்த நவகோண நாயகி, பெருமிதத்தோடு என்றும் பாராட்டிச் சீராட்டும் பெருமான், பாலசுப்பிரமண்யம்.

ஒவ்வொரு கோயிலும் ஒவ்வொரு வகையில் உயர்ந்தது; அவைகளின் மகிமை யனைத்தையும், தன் அகத்திற் கொண்டது திரு ஆவினன் குடி.

திரு - லட்சுமி; ஆ - காமதேனு; இனன் - சூரியன்; கு - பூதேவி; டி - கனல் கடவுள்; இந்த ஐவரும் வழிபட்ட தலம் இந்த ஆவினன்குடி. வழிபட்டு, வாழ்கின்றார் இத்தலத்தில் வானோர்; பேரின்பப் பெருவாழ்வாய் அக்கிருக்கும் பெருமானை, பெருமாளே என்று அழைக்கும் அருமையே அருமை!

எவர் அணியும் அணிகளையும் ஏற்று, பரிபாகத்திற்குத் தக்கபடி அவரவர் செய்யும் திருப் பணிகளையும் ஏற்று, பிரிவின்றிப் பணி நடுவில் முகம் காட்டும் பெருமானை, பணியாவும் பூணுகின்ற பிரானே என்பதை எண்ணவுறுகிறது நம் இதயம்.

குரவர் கொடி, தானே உணர்வால் தழுவ, அவள் அன்புள்ளம் கண்டு, கொடிக்கு உரிய கொழு கொம்பான கோமானே என்றார்.

படைப்பானே புகழ்கின்ற பரமனை, எவரும் வழி பட்டால், உண்டு இன்பம் எனலே, ஆறும் வரியில் அறிவித்தது அரிய ஒரு சமிக்ஞை.

வேத மந்திரம் விமலனது உருவம்; ஆதலின், வேதப்பொருள் காண முயலல் விபரீதம்.

அருள் ஞான அறிவினர், ஞான பண்டிதர் எனப் பெறுவர்; அவருள் என்றும் நாத மயமாயிருப்பான் நம் நம்பன். அங்கிலையில், அவர் உரை அவருடைமை யன்று; அது அமல வாசகம்; அதனாற்றான், பூசையில் அவைகளை வைத்துப் பூசிக்கின்றார் மக்கள்; அக்குறிப்பை மறப்பது மரபன்று; 'ஞான பண்டித நாதா' எனும் பகுதியை ஓதும் போதே உள்ளம் உருகுகிறதே!

காய்த்த மரம்தாழ் கணக்கென்ன, நீயருள
வாய்த்தநாள் ஒன்று வாராமல் நீராதே.

திரிகரணத்தையும் தன்பால் அர்ப்பணித்தாரைக் காக்கக் கட்டிய கழல் காலினன் அவன்.

கருவேளும் நாணும் கட்டழகு மேனியான், வான ஞான சொருபமான தன்னை, வானத்திலிருந்து வழிபட்ட தேவயானைக்கு, வாழ்வளித்த வள்ளல் நம் வரதன்.

'வேடர்தம் கொடி மாலா!' 'வான பைந்தொடி வாழ்வே' எனும் நுட்பம் ஓராமல், வள்ளி தெய்வயானையர் ஏசல் பாடுவார் சிலருளரேல், அது எம்மனோர் செய்த பாவந்தான். இத்தகைய விறுடைய பெருமான், சுத்த சைதன்ய நிலையி லிருந்து, வைகாசி விசாகத்தன்று, எவரும் உய்ய, தடத்த உருவில் வெளியானான்; அதே நேரத்தில் விந்து தத்துவத்தின் மேலும் விளங்குகிறான் எனலே, அப்பெயரே நமக்கு அறிவிக்கின்றது.

வி - சிறந்த; சாகன் - பறவை யூர்தியோன்; எனவே, அவன் மயிலூரும் மன்னன் என்பதையும் உணர்கிறோம் அல்லவா!

அருள்வோனே! பெருமாளே என்று கூவி,

(1) கோவே! (2) தேவா! (3) ஆள்வானே! (4) பிரானே! (5) மாலா! (6) ஸாமீ! (7) ரூபா! (8) நாதா! (9) தாளா! (10) வேளே! (11) வாழ்வே! (12) விசாகா நமோநம என எம் பெருமானை, துவாதச நாமத்தால் அர்ச்சித்து ஆராதிக்கும் அருமை யுடையது இத்திருப்புகழ்!

வாழ்க அருணை முனிவர்!

தை மாதப் பிறப்பு

(ஆ. கி. ரங்கராஜன்)

"தை பிறந்திட வழி பிறக்கும்!" ஆம். தை என்று கூறும்போதே எம்பிரான் திருநடனம் நினைவுக்கு வருகிறது. உடனே ஒரு வியப்பும் களிப்பும் உண்டாகிறது. பக்தி மேலிடுகிறது. பாபங்கள் அகலுகின்றன. நற்கதி பெற வழி பிறக்கிறது. இது ஒரு ஆச்சரியமல்லவா?

தை மாதமாவது முன்பனிக் காலத்தின் பிற்பகுதியாம். கதிரவன் தக்ஷிணாயனப் பிரயாணத்தை முடித்து வடதிசை

தஞ்சே யெனவடைந்தேன், தற்பரநின் பொன்னடியை!
அஞ்சேலென் றென்னை ஆதரித்தால் ஆகாதோ.

விஜயமாகிய உத்தராயணத்திற்கு ஆயத்தமாகி தனுர் ராசியைக் கடந்து மகர ராசியில் பிரவேசிக்கும் காலமாகும். அமரர்களுக்கும் தை மாதம் சூர்யோதயமான காலைப் பொழுதாகும். பாகவதத்தைப் புரட்டினால், அதாவது இறைவன் கண்ணனின் திருவிளையாடல் வரலாற்றை ஆராய்வோமாயின், அமரர்கள் மடமை இருளில் அகந்தை என்னும் அயர்வில் ஆழ்ந்திருந்து பின் அறிவொளி பெற்று விழிப்புற்ற மாதமே தை மாதம் என்பது தெரிய வரும்.

அதிக மழையாலும், பனி, குளிர், நோய்கள் முதலியவற்றாலும் துன்புறும் மாந்தர்க்கும் வழிகாட்டியாக தை மாதம் வருகிறது. ஆதித்தன் தனது கொடும் கிரகணங்களை வீசி, பிணி, குளிர் முதலியவற்றை அழித்துத் தனது அரசாட்சியை நேரடியாகவே இம்மாதத்தில் தொடங்குகிறான். ஆகவேதான் அகில உலக மாந்தர் அரும் புனித நாளாகிய தை மாதப் பிறப்பன்று சூர்யனுக்குப் பொங்கலிட்டு வழிபடுகின்றனர்.

முற்காலத்தில் தை மாதப் பிறப்பன்று இந்திரனுக்குப் பொங்கலிட்டனர். ஏனெனில் மேகத்தை வாகனமாக உடையவன் இந்திரன். மேகங்கள் தக்க காலத்தில் மழை பொழிந்தாலன்றி வையகம் வாழாது. வையகத்தோர் உயிர் வாழ உணவு அவசியம். உணவு உற்பத்தி செய்வோர் உழவர். உழவருக்கு முக்கியமானது கால்நடைகளாம். அதாவது ஆடு மாடுகள். மாடுகளில் சிறந்தது பசு. பசுவினிடம் சகல தேவர்களும் உறைகின்றனர். பசுவை வழிபடுவதால் பாபங்கள் நசிக்கின்றன. பசுவின் பாலினால் நோய்கள் நீங்கி அறிவு வளருகிறது புல் அதன் உணவாகும். அப்புல் முளைத்து வளருவதற்கும் மழை அவசியமாகிறது.

> விசும்பின் துளி வீழின் அல்லால் மற்றாங்கே
> பசும்புல் தலை காண்பரிது—திருக்குறள்.

அதற்காகவே மக்கள் இந்திரனை வழிபட்டனர். நந்தகோப

கையால் சிலர்க்கும் கண்ணால் ஒருசிலர்க்கும்
மெய்யா! நீ செய்ததிரு மேன்மையுணர்த் திட்டேனே.

ரின் தலைமையில் இந்திர விழா சிறப்பாக நடைபெற்றது. சிறுவன் கண்ணன் அதனைக் கண்டான். நந்தகோபரை அவன் அணுகி, "தந்தையே! எதற்காக இவ்விழாக் கொண்டாடுகிறீர்கள்?" என வினவினன். நந்தகோபர் விஷயத்தை விளக்கினர். வெகு நேரம் மௌனமாய்க் கேட்டுக்கொண்டிருந்த கண்ணன், 'கட கட' எனச் சிரித்தான். "தந்தையே! தாங்கள் கொண்டுள்ள எண்ணம் தவறு" என்றான் தைரியமாக.

நந்தகோபருக்கு உடனே பிரகலாதன்மீது நினைவு ஓடியது. "சகலரும் செய்யும் கைங்கர்யமாகிய இதை இவன் ஆக்ஷேபிக்கிறானே! மேலும் இதுவரை இந்த ஆய்ப் பாடியில் எவரும் எனது வார்த்தையைத் தட்டிப் பேசிய தில்லை. இதை ஆலோசிக்குமிடத்து அன்று அவனியாண்ட இரண்யகசிபுவுக்குப் புதல்வனாய்த் தோன்றி அவனுக்கு உபதேசித்த பிரகலாதனையும், பிரமனைச் சிறையிலிட்டுத் தந்தையாம் அரனுக்கு உபதேசித்த முருகனையும் நினை வூட்டுகின்றது. எவ்வாறேனும் இருக்கட்டும்; இவனையே விசாரிக்கிறேன்" எனக் கருதி, "அப்படியானால் எது தவ றில்லாதது? நீயாவது தெரிவி" என்றார்.

உலகில் நீதியை நிலைநாட்ட பிரகலாதனை உண்டாக்கிய வனும், தூணினின்று நரசிம்ம வடிவத்துடன் வெளிப்பட்டு இரண்யகசிபுவை ஸம்ஹரித்தவனுமாகிய ஸ்ரீதரனே கண்ணன் என்பதை அவர் அன்று உணருமாறு அவன் ஓர் லீலை புரிந்தான்.

காமக்குரோதாதிகளைக் கடந்தவனும், ஐந்தொழில் புரி பவனும், எண்குணங்களை உடையவனுமாகியவனே இறைவ னென வணங்கப்படுபவன். இந்த இந்திரன் இதற்கு விலக்கு. இன்பம் துய்ப்பதற்கென வாய்த்ததொரு பதவியே இந்திரப் பட்டம். ஆதலின் இந்திரனுக்குப் பொங்கலிடுவதைவிட சூரியனுக்குப் பொங்கலிடுதல்

நன்றறியான் தீமை நயந்தான் இவனென்ன
என்றும்பேர் கொள்ளா திருக்க அருளுதியோ.

சிரேஷ்டமானது. சூரியனது சக்தியால் உலகம் இயங்குகிறது. மழை பொழிகிறது. பயிர் விளைகிறது. உயிர்கள் உய்கின்றன. சூரியன் ஜோதி வடிவினன். அவனை ஆராதித்தலே நம் கடமை" என்றனன்.

கண்ணன் கூறிய வார்த்தைகள் நந்தகோபருக்குச் சரியாகப் பட்டாலும் சமாளித்துக்கொண்டு, "எப்படி இருப்பினும் வழக்கத்திற்கு மாறாக எதுவும் செய்யக்கூடாது" என்று கூறிச் சென்றார். தீராத விளையாட்டுப் பிள்ளையான கண்ணன் யசோதை இடும் பொங்கலில் சிறிதளவு எடுத்து நாவினால் நக்கினன். இந்திரனுக்கு உச்சிட்ட வாடை வீச, இந்திரன் ஐயுற, நாரதர் நடந்ததை நவின்றார். கொதித்தெழுந்த இந்திரன் ஆயர்களின் அகந்தையை அடக்குவேன் என முகில் கூட்டத்தை ஏவி மாரி பொழிவித்தனன். அகோர மழையால் மக்கள் தவிப்பதைக் கண்ட கண்ணன், அடுத்திருந்த கோவர்த்தனம் என்ற குன்றினை அநாயாசமாகப் பெயர்த்து, இடது கை சுண்டு விரலில் ஏந்தி நின்றான்.

கண்ட நந்தகோபர் வியப்பும் திகைப்பும் மகிழ்வும் அடைந்து, "நமது புதல்வன் ஓர் அவதார புருஷன் போலும்! இன்றேல் மானிடரால் இயலாத அசாதாரண செயல்களைப் புரிய இவனால் முடியாது. ஆராயுமிடத்து ஒருகால் இறைவனே இவ்வுருவில் வந்துள்ளானோ என்ற ஐயம் எழுகிறது! எப்படி இருப்பினும் இவனால் மானிடருக்குப் பெரும் நன்மைகள் ஏற்படக்கூடும், இவன் நமது புதல்வனாகத் தோன்றியது நமது பாக்கியமே!" எனக் கருதிக் கண்ணனை மார்புறத் தழுவினார். கண்ணன் கூறினான்: "தந்தையே! இந்திரன் மேகங்களை ஏவி நம்மை அழிக்கத்தக்க மழையைப் பொழிவிக்கின்றான். அதி விரைவில் அவன் அகந்தை அடங்கும், பாருங்கள்"!

வாரம் ஒன்று ஓடியது. குன்றின் அடியில் ஓரே கோலாகலம்! கோபியர்களும் கோபாலர்களும் கண்ணனைப்

நாளெல்லாம் உன்னை நயந்தேத்திப் பாடும்
ஆளாக்கி யப்பா! அடிமைக் கருளுதியோ.

புகழ்ந்து ஆடிப் பாடினர். தங்கள் துன்பம் துடைக்கத் தோன்றிய வள்ளல் எனப் பாராட்டிச் செயற்கரும் செயல் புரிந்த அவனை, இறைவனெனப் பாவித்து அவனுக்கே பொங்கலிட்டு ஆராதித்தனர். நாரத முனிவரும் அங்கு தோன்றி அவர்கள் அளித்த உபசாரத்தை ஏற்று அமராவதியாம் பொன்னகரம் ஏகினர்.

வானவர்கோன் தான் அனுப்பிய மேகங்கள் மீளாதது குறித்து யோசனையில் ஆழ்ந்திருந்தான். யாழ் முனிவர் அங்கே பிரவேசித்து மேகங்கள் ஆயர்ப்பாடியில் இடைவிடாமல் வருஷிப்பதையும், அம்மழை கோவர்த்தனகிரியால் தடுக்கப்பட்டு யமுனையில் பாய்வதையும், கோகுலத்தோர் கண்ணனைக் கொண்டாடுவதையும், நாரணனே கண்ணனென்பதையும் இந்திரனிடம் விவரிக்க, அவன் மிகவும் அச்சம் கொண்டு, உடனே பூவுலகில் பிரவேசித்து ஆயர்ப்பாடியை அடைந்து கண்ணனிடம் சரண் புகுந்தான். அவன் மூலம் கண்ணன் இறைவனே என அறிந்து அனைவரும் ஆநந்திக்க, இந்திரன் கேசவனை ஐராவதத்தில் அமர்த்தி விண்ணகம் சென்றான். (க—பிரமன். ஈச—சிவபிரான். அயனும் அரனும் வழிபடுவதால் கேசவன் என்ற நாமம் ஸ்ரீதரனுக்கு ஏற்பட்டதாம்).

ஆங்குக் காமதேனு தனது பாலினால் அபிஷேகம் செய்ய, இந்திரன் அமுதத்தைத் தருவித்து மாதவன்மீது பொழிந்து பாரிஜாத மலர்களால் அருச்சித்துப் பிழை பொறுக்குமாறு வேண்டினன். மதுசூதனன் இசைந்து தை மாதப் பிறப்பன்று கதிரோனை ஆராதித்தலே மக்கள் கடமை என்றும், அதற்கு முன் தினமாகிய தனுர் மாதத்தின் இறுதி நாளில் இந்திரனை மாந்தர் வழிபடுவர் என்றும் கூறி யருளினன். முகில்வாகனனும் அச்சுதன் பசுக்கள் பால் கொண்ட கருணையை வியந்து, இனி அவனை அனைவரும் கோவிந்தராஜன் என அழைப்பர் என்றும், ஆண்டு தோறும் அவன் நினைவுகூர தை மாதத்தில் இரண்டாம்

வாயோன் றுரைக்க மனமொன்றை யெண்ணுமல்
தாயுடனே வந்தென்னைத் தந்தாய்நீ காவாயே.

நாள் கண்ணனுக்கு உலகோரும் தாங்களும் பொங்கல் முதலியன இட்டுப் பூஜிப்பதாகவும் வாக்களித்தனன். அவ்வாறே இன்றளவும் மாந்தர் அன்றைய தினம் கண்ணனை வழிபடுகின்றனர்.

இராமனருள் பெற்ற தியாகராஜ சுவாமிகள் அம்மை குண்டலினியால் கபாலம் திறக்கப்பட, ஜோதி வடிவில் இறைவனுடன் கலந்த நன்னாளும், இந்திய சுதந்திரத் தந்தை காந்தியடிகள் அமரத்வம் எய்திய நன்னாளுமாகிய சுபதினம், இம்மாதத்தின் கிருஷ்ணபக்ஷ பஞ்சமி திதி வரும் நாளே யாகும். வடலூர் வள்ளல் முக்தி பெற்றதும் இம்மாத புஷ்ய நக்ஷத்ர தினமாகும்.

தைக்குப்பின் மாரியறும் கோடைமிகும் தானியங்கள்
பைய அறுவடையாகும் பார்தனிலே—மெய்கண்டாய்
தை எனும் சொல் திருச்சபையோன் அருட்குறிப்பை
[உணர்த்திடுமால்
தையின் சிறப்பே சிறப்பு.

சிறப்புமிகு மெய்யடியார் தோன்றியதும் அவ்வடியார்
இறப்பெய்தா மேலாம் இன்பநிலை—குறித்ததுவும்
ஐயமற நீயறிவாய் தைத்திங்களாகுமென
வையகத்தில் உண்மையிதைக் கூறு.

கூறுபட சூரபத்மன் மார்பதனில் வேலதனை
சிறவிடு முருகனது திவ்வியமாம்— பேருனை
சிறு வயதினில் பெற்று திருவருட்பா அளவிறந்து
அருளியவன் மகிழ்ந்ததிந்தத் தை

தைத்-தா-தை-தாதைஎன மெய்த்தாதை யாமிறைவன்
கைத்தாள மொடுபாத சிலம்பொலிப்ப—பொய்திகழும்
சித்தத்தோர் காணாத சிற்சபையில் நடனமிடும்
உத்தவத்தை உணர்பவனே ஞானி.

இவ்விதம் எண்ணரும் சிறப்புகள் வாய்ந்த தைம் மாதப் பிறப்பை நாம் ஆனந்தமாய் வரவேற்போமாக!

காம்பணிசெய் தோளியெனும் கனகவல்லித் தாயென்னை
ஓம்புகளன் ஏதும் ஒருதுட்பம் ஓர்ந்தேனே.

RELIGION AND HISTORY

Has religion a history? History is said to repeat itself. It is essentially so in matters of Religion. All religions, really so called, are but repetitions and re-affirmations of the one truth of the Upanishads - One God, one man, one life. All life is a voyage. The past wherefrom it starts is shrouded in a mystery. The future after it ceases is also a sealed book. Though precipitated into what is called a life in the material world, every generation of men has felt an intellectual and emotional condition of dependence on and faith in a superhuman entity as a psychological necessity. The need to draw from the unknown and unknowable Infinite Life for a life of fullness in the world of matter, is universal. There are multitudinous ways of approach from the limited to the unlimited. The countless forms of limitations that we see in the lives over the globe, must necessarily result in equally countless forms of escape from the limitations to the realisation of the One and the only one Unlimited Universal ever unchanging. The various forms of escape, according as they command larger or lesser number of votaries, are designated religions. These religions often times get intolerant with age, when the essence of religious effort gets misplaced and the methods of escape from limitations, get to be mistaken for the thing to be realised which is but another word for Mukti or Paradise or what not.

All humanity is one. All Divinity is one. Encrusted perception posits different kinds of

men and equally varied and differing Gods. The multiplicity of human existences is supposed to lead to the multiplicity of Gods and warring men have many warring gods. History of religions in the main, is a history of errors of passing humanity by which the universality of man and God in the ultimate is obliterated by the strife and suffering caused by ill-conceived and intolerant untruths. The ways are multitudinous, but they lead to the one Heaven for all. This is the advaitic ideal of all inclusiveness. This is the essence of the religion of the Veda and the Vedanta which forms the bed-rock of all sections of Hinduism so-called. When this is realised, the warring interests of diverse men with diverse gods disappears. There is no room for history thereafter. True religion abhors all history. For, at this point there lies no room for differentiation of men and Gods, nor of the past and present. All history merges in the all embracing one-pointed experience of the One God for all time past, present and future for all men in the past and the present and the future. The mellowed heart of universal love and the keen enlivened intellect perceiving the one permeating entity in the Universe,—the one unity within the diversified world of time and matter,—can alone obliterate the warring world in the even pastures of Universal Peace.

—*Thiruppugal Mani*

519

கடையவனேனைக் கருணையினால்
கலந்து ஆண்டு கொண்ட
விடையவனே! விட்டிடுதி கண்டாய்!
விறல் வேங்கையின் தோல்
உடையவனே! மன்னும் உத்தரகோச
மங்கைக்(கு) அரசே!
சடையவனே! தளர்ந்தேன்; எம்பிரான்!
என்னைத் தாங்கிக் கொள்ளே!!

No.1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ.1506

520.

Coffee

Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி - மதுரை

Tel:—"FAITH" Estd:—1924. Phone:—113

அரிய தெய்வ அருள் நூல்கள்

குகஸ்ரீ. பு. பா. ரசபதி விரிவுரையுடன்

ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அநுபூதி	1	0	0
„ 6 திருவகுப்புகள்	1	8	0
ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்	2	0	0
ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா	2	0	0
ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா	2	0	0
ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல்	1	8	0
திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள்	0	6	0
திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்)	0	12	0
கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன்	1	0	0
தேவி தாஸர்கள் (அச்சில்)			
சிவநேயச் செல்வர்கள் „			
கணபதி பக்தர்கள் „			
முருகனடியார் „			

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
Edited & Published by S. Muthuswami, 54, Bunder St., Madras-1.